REGISTERED No. M. 120.

ओं.

JNÂNA BODHINI.

A TAMIL MAGAZINE AND REVIEW.

DEVOTED MAINLY TO

LITERATURE, SCIENCE, PHILOSOHY & RELIGION.

EDITOR:

M. S. PURNALINGAM PILLAI, B.A.

Vol. VII. No. 10.—October 1904.

CONTENTS.

PAGE.

I. EDITORIAL NOTES:
The three Patrons of Tamil Literature:
A Madhathipathi—H. H. Thondaiman-Pandithorey ... 321

II. ORIGINAL ARTICLES—
1. On Hygiene............... **T. Chelvakesavaroya Mudaliar, M. A.** ... 326
2. On the Twelve Names of Tirumal, **Pandit T. Venkatarama Iyengar** ... 329
3. Guay's Shepherd and the Philosopher(in verse) **R. M. Gopalakrishna Iyer** ... 333
4. Natural History II. Social Insects, **V. N. Iyengar, M. A.** 337
5. Chulamani—(a Drama). **V. K. Rangachariar** ... 341
6. Saraswati—(a Novel) **V. Muthukumarasami, B. A.** 347

III. PERIODICAL LITERATURE—
Vemanna's Poems (in Venba)—On the Preservation of Topes. 352

IV. LADIES' PAGES—
Female Education 356

V. DEPARTMENTAL NOTES—
Agricultural—Value of Bone Manure 359
Industrial—Manufacture of Plantain Fibre ... ...

Madras:

"THE MADRAS LITERARY BUREAU,"
10, BROADWAY.

1904.

Thompson & Co., Printers, Madras.

ஞானபோதினி.

"மதராஸ் லிடரரி பூரோ" விலிருந்து வெளியாகும்

ஓர் சிறந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

சம்புடம் VII. } 1904-ம் ௵ அக்டோபர்௴ { சஞ்சிகை 10.

Jnana Bodhini.

வருஷ சந்தா ரூ 2—8—0.
(முன் பணம்)
விளம்பர விகிதம்,
முழுப் பக்கத்திற்கு ரூ 10—0—0.
அரைப் பக்கத்திற்கு ரூ. 6—0—0.
ஒப்பந்த விகிதம் எழுதித் தெரிந்து
கொள்ளலாம்.

Annual Subscription Rs. 2—8—0.
Strictly Payable in Advance
(Post free).

Advt. Charges: Full page Rs. 10—0—0.
Half Page Rs. 6—0—0.
Contract Rates on application.

உள்ளுறைகள்:—

I. பத்திராசிரியர் குறிப்புகள்:— ...
1. தமிழ் நாட்டு முச்செல்வர்கள்: ... 321.
பண்டாரமகாசந்நிதிகள்—தொண்டைமான்...
—பாண்டித்துரை
2. பூமிக்குப் பெரும்பாரமானவர்கள் ... 324.
3. சர்வஜன மித்திரன்— ... 325.
II. விசேட நிருபங்கள்:— ...
1. சுகாதார தருப்பணம் III. ... 326.
T. செல்வகேசவராய முதலியார் M. A. ...
2. திருமாலின் பன்னிருநாமப்பொருள்விளக்கம் II. 329.
—பண்டிதர் வெங்கடராம ஐயங்கார். ...
3. இடையனும் கலைஞனும்—(அகவல்) ... 333.
M. கோபாலகிருஷ்ணையர்
4. ஜீவ சுபாவ தத்துவ விளக்கம் II, பூச்சிக்குழாம்...337.
—V. நரசிம்ம ஐயங்கார் M. A.
5. சூளாமணி நாடகம்—(அகவல்)— ... 341.
—V. K. அரங்காசாரியர்.
6. ஸரஸ்வதி—(கதை)— ... 347.
V. முத்துக்குமாரசாமி B. A.
III. பலபத்திரிகா வித்தார மஞ்சரி:— ... 352.
IV. மாதர்க்கிதமான பக்கங்கள்:— ... 356.
—பெண்கல்வி.
1. வேமன்ன பத்யங்கள்—தோப்புப் பாதுகாப்பு.
V. பலதுறைக் கலாவிசேடக் குறிப்புகள்:— ... 359.
(1) விவசாயம்—எலும்புத்தூள்.
(2) கைத்தொழில்—வாழைநார்.

சென்னை:
தாம்ஸன் கம்பெனியிற்
பதிப்பிக்கப்பட்டது.

1904.

சுகாதார தருப்பணம்.

(இச்சஞ்சிகையின் 328-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஆரோக்கியத்தைப் பற்றிப் பராமரிக்கையாக இருப்பதும் அதே கவலையாக இருப்பதும்: சிலர் தங்கள் ஆரோக்கியத்துக்குப் போதிய அளவு கவனஞ் செலுத்துவதில்லை. சிலர், வடக்கே நோக்கியிருக்கும் காந்த ஊசி போன்று, அதே நினைவாக இருப்பார். இவ்விருதிறவர் செய்கையும் ஒன்றற்கொன்று முரண்பாடுடையவேனும் இவ்விரண்டும் கேட்டைத் தருவனவேயாம். சுகாதாரவிதிகளை ஒருசிறிதும் அனுசரியாமல் பராமரிக்கையாயிருப்பவர்கள், "உப்பில்லாவிட்டால் தெரியும் உப்பருமை, அப்பனில்லாவிட்டால் தெரியும் அப்பனருமை" என்பதாக, உடலில் ஏதாவது பிரமாதமான வியாதி உண்டான பிறகே, என் செய்தோம்? என்னுற்றோம்? மருந்தெங்கே? மருத்துவன் எங்கே?" என நாடுவர். "நோய்க்கிடங்கொடேல்" என்பதை மறந்து, நோய் வந்த பின் வைத்தியரையும் சுகாதார சாஸ்திரத்தையுந் தேடுவது, கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரஞ் செய்வதையொக்கும்.

ஆரோக்கியமே நினைவாக இருப்பவர்கள், சந்தை விலை வேறுவேறுபடுவதைக்கண்டு நடுங்கும் வர்த்தகர்போல, காலம் வேறுபடுவதைக்கண்டு நடுங்குவர். இவர்கள், "உட்டினம் உடலை உருக்கிவிடுமோ? சீதளம் சலதோஷத்தை வரவழைக்குமோ?" என்றஞ்சி, வாயுவின் சீதோஷ்ண நிலைமைக்கேற்றவாறு அப்போதைக்கப்போது உடை வகைகளையும் உண்டி வகைகளையும் மாற்றிக்கொண்டிருப்பார். உண்ணுமளவும் உறங்குமளவும் காணி மாகாணியும் ஏறாமல் குறையாமல் இயந்திரம் போன்றியங்குவர். இவர்கள் தின்னாத கடைச்சரக்கு மருந்தில்லை. இவர்களறியாத கோரக்கர் வைத்தியமுமில்லை. ஆரோக்கியமான தேகநிலைமையில் செய்யலான சத்காரியசிந்தனை யாதொன்றுமின்றிச் சரீர சுகமே பிரதான நினைவாக இருப்பதால், இவர்கள் செய்கை, விரும்பற்பாலதும் அனுசரித்தற்பாலதுமன்று. பசி தாகம் சீதோஷ்ணம் முதலியவற்றைக் காலத்துக்கேற்றவாறு தாங்கத்தக்க உடலின் தன்மையைக் கெடுத்துக்கொண்டு, இவர்கள் தொட்டாற் சுருங்கியும் என்றாற் சுருங்கியும் ஆதலால் இவர்களிடம் வியாதி தொடர்வது வெகு சுலபம். அதை ஓட்டுவது வெகு பிரயாசம்.

முடிவு. அறநெறியில் நின்று பொருளீட்டி இன்பநுகர்ந்து வீடடைதற்குக் கருவியாயிருப்பது சரீரம் ஆகையால், ஆயுள் பரியந்தம் யாவரும் நோய்க்கிடங்கொடாமல் தங்கள் தங்கள் சரீரத்தைப் பாதுகாப்பது கடமை. சரீரத்தை ஆரோக்கியமுடையதாகப் பாதுகாக்கு முறைகளை ஒவ்வொருவரும் அறியவேண்டும். முதலில் அம்முறைகளை நாளடைவில் அனுட்டித்து வரல் வேண்டும். முதலில் அம்முறைகளை அனுட்டிப்பது பிரயாசமாகத்தோன்றும். அனுட்டானத்தில் வந்துவிட்டபிறகு யாதொரு பிரயாசமுமின்றிச் சுவபாவமாகிவிடும்.

முடிந்தது.

திருமணம் செல்வகேசவராய முதலியார் M. A.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

ஞானபோதினி.

"மதராஸ் லிடரரி பூரோ" விலிருந்து வெளிப்படும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் VII. } 1904-ம்ஸ்ரீ அக்டோபர்மீ { சஞ்சிகை 10.

THE THREE PATRONS OF TAMIL LITERATURE.
தமிழ்நாட்டு மூச்செல்வர்கள்.

தமிழ்ப்பாஷாபிவிருத்திக்கேதுவாக முற்காலங்களிலே சேர, சோழ, பாண்டியர்கள் என மூவர்இருந்தனர். அவராலேயே கபிலர், பரணர், சாத்தனார், ஒட்டக்கூத்தனார், புகழேந்தியார் என்பார் தமது கல்விப்பெரும்புகழைப் பற்பலபெருமுறைகள் இயற்றிக் காலம் உள்ளளவும் நிலைநிறுத்திச்சென்றனர். பிற்காலத்திலும் பல்லோர் தோன்றினர்; அவர்களுக்குற்ற துணையாகப்பிரபுக்களும் குறுநிலமன்னர்களும் விளங்கினர். பலசிறுகாவியங்களும், பிறவும் வெளியாயின. இக்காலத்திலோ முற்காலத்திய மூவர்க்கிணையெனத்தகுந்த சிறப்பாளரும் மூவர் உளர். இம்மூவர்க்கும் தமிழைவளர்க்கும் ஆர்வமோபெரிதே. வளர்த்தே வருகின்றார்கள். இன்னோராற் புதுக்கிரந்தங்கள் பலதோன்றுதற்கிடனில்லாவிடினும், பழங்கிரந்தங்கள் தண்டமிழோர் கரமேறிவருகின்றன. அதுவே பாக்கியம். அம்மூவரையும் இன்னின்னாரெனச் சிறிது சுருக்கி இங்குக்கூறுவோம். பின்னர் ஒவ்வொருவரைப்பற்றியும் விஸ்தரித்து நன்குவரைவோமாக.

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகசுவாமிகள்.

இப்பொலிவுருவினர் திருக்கைலாயபுரம் திருவாவடுதுறைபா தீனத்துப் பண்டாரமகாசந்நிதிகள். இவரது திருவுருவே கண்ணுக் கானந்தமூட்டத் தகுந்தது. மிகத்தடித்தவர் அல்லர் எனினும் மெலிந்தவரும் அல்லர். போதியமட்டிலும் நீண்டவர் ஆதலால் நெடி யோன் பதத்தைத் திருமாலுக்கே உரிமையாக்கிவிட்டார். சிவந்த மேனியர், நயந்தகுணத்தினர், முன்னெற்றி விசாலமுடையவர். குளி ர்ந்தமுகமுங்கொண்டவர். தமது அடிபரவுவார்மன "மலர்மிசையேகு வார்". பக்திகொண்டொழுகும் நல்லாரைஎல்லாம் "நிலமிசை நீடுவா ழ்விப்பார்." இன்னவர்க்குத் தொண்டுபுரிவோர் கணக்கென்ன, அம்மம்ம! இயம்பும் தரத்ததல்ல! இவருக்குத் தமிழ்மாதுமீதிருக்கும் ஆர்வமே ஆர்வம், அது எழுதக்கூடியதோ? முற்றிலுங்கூடாததே. இம் மாட்சியருக்கு உலகமோ நன்குதெரியும். எத்தகைத்தானவர் இவரை உறினும் பாடெய்தியமனத்துடன் திரும்புவார் அல்லர். அவரவர்க்குத் தகுந்தமாதிரிபேசி மனதைக்குளிரவைத்து அனுப்பும் மகாசாமர்த்தி யம் இவரிடம்உண்டு. பத்திரிகைவாசிப்பினர்; மாதாந்தசஞ்சிகை களையேற்றுக் கண்ணுறுபவர்; நவீனகிரந்தங்கள் வெளிப்படுமவற்றை ஏற்பவர்என்றால் உலகமும் அதன் நானாவித வியாபாரங்களும் இவ ருக்குத் தெரியாது எங்கேஒளிக்கும்? இம்மகான் திருவிடைமருதூரில் வசிக்கின்றார். வாசஸ்தலம் ஓர் சிரந்தமடம். அதுவோர் பூஞ்சோலை கொண்டது; குளத்திற்கருகாமையில் உளது; பெரியதெருவிற்கணி யானது. திருவாவடுதுறையிற் புத்தகாலயம் நிருமித்துளர். இவர் தரிசனத்துக்குப் பிரதிதினமும் அடைவோர்கொஞ்சமா? ஓர் அவ தானியின் வேலையாகவே இவர்புரியுங் கருமங்கள்விளங்கும். விஸ்த ரிக்கிற் பெருகும். தமிழ்ப்பாவலர்களுக்கு வேண்டியன உதவிக் காத் தருளும் மகாசந்நிதிகளாகும் இப்புனிதருக்கடுத்தவர்

2. மாட்சிமைதங்கிய மார்த்தாண்டபைரவ தொண்டைமான் பஹதூர்.

இவர் காவலர். மன்னுயிரைத் தன்னுயிரேபோற்காக்குந் திறமு டையவர். இவர்நீண்டுவளர்ந்தவர்; தக்கதேககாத்திர மடைந்தவர். ஆங்கிலம் பயின்றவர்; ஆங்கிலேயருடன் பயிலுமவர். நடையுடை பாவனையனைத்தும் ஆங்கிலேயருடையனவே எனினும், ஸ்ரீ பிரஹ

தாம்பாள்பாதசேவையன்றி இவருக்கு அன்னமில்லை. அம்பாள் ஸ்மரணையே இவரது சகலபாக்கிய போகங்களும். தெய்வபக்தி இவரது மனதைவிட்டகன்றதல்ல. இவர் பிராமண விசுவாசியே. தமது சமஸ்தானத்தில் பிராமணர்களுக்கு வேண்டிய உதவிகள்பல பற்பல வழிகளில் செய்யப்பட்டுமுள்ளன. அவைகளை இன்னும் இவர்இன்னே நடத்துகின்றார். இவர் மகாராஜாவாதலால், அடிக்கடி எவர்க்கும் காண்டற்கெளியர் ஆவதில்லை, கண்டாலோ இவர்மாதிரி எவரும் எளியராகார். குளிர்ந்தமொழியினர். இராஜகுணம் பலவும் படைத்தவர். இளகியமனத்தினர். சதாவேட்டைமேற்பிரியர். சீமைசென்று மகாராணியார் தரிசனஞ்செய்து கம்பீரமாகத் தேகசவுக்கியம் பெரிதும்பெற்றுத் தமது சிமை திரும்பியவர். புதுக்கோட்டைப்பட்டணமே ஓர் பட்டணம். அதன் அமைப்பும், அதனுள் உள்ள பற்பல விமரிசையான கட்டிடங்களும், இன்னும் பலவும் கண்டோர் கண்களை விட்டுநீக்குவனவல்ல. புதுக்கோட்டை புகுவோர்க்கெல்லாம் பிரஹதாம்பாள் சேவை முந்திக் கிடைக்கும். ஊரைச்சுற்றிலும் நீர்மலிகுளங்கள் விளங்குகின்றன. இவர் இராஜதானி நகரையடைந்தோர் சிவகங்கையில் மூழ்கிப்போனானந்தமடைந்தோராகவே திரும்புவது உறுதி. தொண்டைமானே தற்காலத்துத் தமிழ்நாட்டுமன்னரானவர். தமிழ்ப்பாஷையின் கிளையெனப் பெயர்கொண்ட மலையாளத்திற்கும், தெலுங்கிற்கும், கன்னடத்திற்கும், ஒவ்வோர்மன்னர்உண்டே. அன்னவர்போலத் தமிழர்க்கு விளக்கமுற்றமவர் இவரே. இவர்தம் நாட்டிலேதான்தமிழ் இராஜபாஷையானது. தொண்டைமானுக்குத் தமிழ்ப்பற்றதிகம். இதைவிளக்கவே, இந்தவியாசத்திற்கு மூன்றாவதாகத் தோன்றும்

3. ஸ்ரீமான்பாண்டித்துரைத் தேவரவர்கள்.

மதுரையிலே தோன்றியுளார். பாண்டித்துரையெனப் பெற்ற பெயர்க்கிலக்காய்த் தமிழை வளர்க்கப்புகுந்த இவர்மனத்தூய்மை என்னே! யானைக்கு யானைதான் கைகொடுக்கும். அதுபோல இவர் முன்வந்து ஏற்படுத்திய சங்கத்திற்கு வேண்டிய உதவியை நாடிச் சுற்றிலும் உள்ள உள்நாட்டு வேந்தர்களுக்கு ஓலைபோக்கினர். அவர்களில்எல்லாம் உயர்ந்த நன்கொடையளித்தவர் தொண்டைமானே. ரூ. 5000 நன்கொடையாகவும், மாதாமாதம் ரூ 50 சங்கமுள்ளளவும்

அதுநடைபெறுவதற்குதவியாகவும் அளித்தபிரஹதாம்பாள்சகாயன் வண்மையை எவ்வாறு வழுத்துவேம்! இவர் திருவாவடுதுறைப் பண்டாரசந்நிதிகள் பாதகமலத் தலைக்கணிபவராதலால் அவர்க்கு உயரத்திற் குறைந்தவரே. தொண்டைமானையடுத்தவராதலால் அவரது தேககாத்திரங்கொண்டவர் அல்லர். ஒருவாறுயர்ந்து போற்றிய ஒற்றைநாடித் தேகமுற்றவர். அதனால்தான் எதுக்கும் சலியாது கம்பிபோலிருந்து "கருமமே கண்"ணாயிருக்கின்றார். இவர் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் தலைவர். அச்சங்கமோ ஓர் அச்சியந்திரசாலையைக் கொண்டது; புத்தகாலம் அமைந்தது; தனித்தமிழ்க்கலாசாலையைப் போற்றுவது; பண்டிதபாவலர்களைக் காத்தளிப்பது. பிரசுரங்களை வெளிப்படுத்துவது. இவைகட்கெல்லாம் தலையாளவர் நமதுபாண்டித்துரை. இவர் சர்வஜனபந்து; பற்பலவிடங்களிலும் பற்பலவித்துவ ஜனமித்திரர் ; தண்டமிழ்ச் செல்வர். நல்லமனங்கொண்டவர். நல்லவரைவிடாதவர். அல்லவரையடுக்காதவர். இவருக்கு அல்லும் பகலும் ஓர் சிந்தையுண்டு: அதுதான் தமிழ்ப் பாஷாபிவிருத்தி. அதற்குழைக்கவே இவர் பிறந்தவரென்று பலர் பலவாறு பன்னிப்பன்னிப் பேசுகிறார்கள். அது பொய்யோ?

பூமிக்குப் பாரமானவர்களுக் காகும் பெருஞ் செலவு.

1901௵ எடுத்த கானிஷ்மாரிக்கணக்கால் ஒரு விசேடச் செய்தி வெளியாகின்றது. அது என்னவெனில், இந்தியாவின் நாற்புறவெல்லைக்குள் எல்லாம் ஐம்பத்திரண்டு லக்ஷம் ஜனங்கள் சாதுக்கள் என்றும், ஐயம்புகுவோர் என்றும், அனாதிகள் என்றும், காலங் கழியா நிற்கின்றார்கள் என்பதே. அரைக் கோடி பிரஜைகளுக்குமேல் இராஜியத்திலே ஐயம் புகுவோர் என்றால், இது என்ன அநியாயமாய் இருக்கின்றது ! கூன் குருடு, மொண்டி முடம் ஆகிய ஆகாமாக்கள் மடங்களில் வாழலாம். காலிருந்தும் கண்ணிருந்தும் உடலிருந்தும் வேலை செய்யுந்திராணி இருந்தும் சோம்பல் மேலீட்டால் ஐயம் புகுவதே சால்புடைத்தென்று கருதி அத்துறையிற் படிந்து பத்து வருஷத்திற் கொருமுறை எடுக்கும்

கணக்கைப் பெருக்கத் தாமும் வயிறு பெருக்கிவரும் பெருச்சாளிகளாகும்வரை, அம்மம்ம! நாம் கண்டால் அஞ்சுவோம்! அஞ்சுவோம்!! நமது நாட்டில் கைத்தொழிற்கு வேண்டிய முயற்சிகள் இல்லையென்றும், பணம் இல்லையென்றும் நாட்டின் தலைவர்கள் எல்லாரும் அடித்துக் கொள்ளுகிறார்கள். எனினும், இப்பெருச்சாளிகள் ஊரார் பணத்தில் எத்தனை பாகத்தை ஊதாரிசெய்து வருகின்றன. அது என்ன பார்ப்போம். தலைக்கு ரூ மூன்று விழுக்காடு இட்டு 52 - லக்ஷம் பேர்களுக்கு என்னுகிறது பாருங்கள். ஒன்றரைக்கோடி ரூ செலவு இவர்களால் நம்மவர்களுக்குப் பிரதி மாதமுமாகின்றது. ஒரு வருஷத்திற்கோ 18 கோடி ரூபாய். இந்தத் தொகையைக்கொண்டு எத்தனைப் பெரிய கைத் தொழிற் சாலைகளை, எத்தனைப் பெரிய பொன்னுதியகனிகளை முறையே ஸ்தாபித்தும் கண்டுபிடித்தும் ஒழுங்காக நாட்டிற்கும் நாட்டவர்களுக்கும் பயன்படு மார்க்கத்திலே நடத்தி வரலாம். 18 - கோடி ரூபாய்க்கு நமது இந்திய நாட்டில் இருக்கும் ஒவ்வொருவரும் அதாவது ஆணும் பெண்ணும், சிறுவனும் சிறுமியும், எல்லா மதஸ்தரும் எல்லாக் காலங்களிலும் எல்லாவழிகளிலும் தலை ஒன்றுக்கு அணா 8-வீதம் கொடுக்கின்றார்கள். இம்மாதிரி நாடு முன்னுக்கு வரும் வழி ஒன்றினைக் கைப்பற்றி அதற்குத் தமது கெப்பொருளைக் கொடுத்து உதவினுல், இந்திய நாடு உண்மையாகவே ஓர் பெருத்த நாடாகும்; இந்தியர்களும் ஐயமில்லாமலே நிகரில்லா ஓர் ஜாதியர் ஆவார்கள். இது உண்மை; உண்மையே உண்மை. இதற்கே உழைக்கவேணடும்; அவ்வுழைப்புத்தான் இந்தியர்களுக்குப் பேராபணமானது.

சர்வஜன மித்திரன்.

இது திருநெல்வேலிப் பாலத்திலிருந்து வார மிருமுறை வெளியாகும் தமிழ்ப்பத்திரிகை. பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்யும் நிருபர்கள் இதற்குத் தக்கவர்களாகவே காணப்படுகிறார்கள். பத்திரிகையிலே பல பல புதிய நிருபங்கள் காணப்படுகின்றன. அதிலே அவ்வப்போது காணப்பெறும் மாதர்க்கேற்ற வியாசங்கள் அதிகஞ் சிறந்தவை யென்றற் கையமேயின்று. அதன் ஸ்திரீபத்திகள் ஸ்திரீ

களால் எழுதப்படுவதாய்க் கேள்வியுறுகின்றோம். அது உண்மையேல், பத்திரிகை சிறக்கச் சிறந்ததென்பதற்குச் சந்தேகமும் உண்டோ? இதர தமிழ் வர்த்தமானப் பத்திரிகைகள் போலாகாது குறித்தகாலத்திலும் வெளிப்படுகின்றது அதனை நடத்துவோரின் திடசித்தத்தையும் பிடிவாத குணத்தையும் விகசிதப்படுத்துகின்றது இச்சஞ்சிகையில் அதிலே வெளிப்பட்ட சில மாதர் விஷயங்களை எடுத்துத் திரட்டிப் பதிப்பித்துள்ளோம். அவைகளைப் படிப்போர் அவைகளை எழுதியவர்களின் சமர்த்தை நன்றாய் ஆராய்வார்கள் என்றற்குத் தடையேயில்லை. திருநெல்வேலியிருந்து வெளியாகும் அது, சென்னையிலிருந்து தோன்றுமாகில் தமிழ்நாட்டவர்கள் அனைவோரும் அதிக ஆவலுடன் ஏற்றுப்படிப்பதற்குரியதாக விளக்கமுறும். எனினும் "சேற்றிலன்றோ செங்கழுநீர் மலரும்".!

ON HYGIENE III.

சுகாதார தருப்பணம்.

உற்சாகம். தேகாரோக்கிய மாத்திரமே சௌக்கியத்துக்குப் போதியதன்று. உண்டிகொள்ளுதல், உறங்குதல், உழைத்தல் முதலியன செய்யும் சமயங்களில் மனச்சிந்தை யாதொன்றுமின்றி உற்சாகங் கொண்டிருப்பது நீடியவாயுள் பெறுவதற்கு அனுகூலமாகும்.

(உயர்ந்ததின் மேலிரார்) உள்ளழிவு செய்யார்
இறந்தின்னா செய்தக் கடைத்துங்—குரவர்
இறங்கினனுர் உண்ணு மிடத்து—என்ற கருத்தைக் கருதியறிக.

அழுக்காறு, சீற்றம், மனக்கவலை, அதிக ஆனந்தம், வெளியிடாத துக்கம் என்றூற் போன்றவை ஆரோக்கியத்துக்கு இடையூறு தருதலால் இவற்றைக் கடிய வேண்டும், இவற்றுள் யாதொன்றினாலும் மூளை நரம்புகள் தாக்குண்டு கலங்கினும், அவ்வணங் கலங்குறும் போது சுவல்பமான ஒரு துன்பமும் பிரமாதமாகத் தோன்றும். இவ்விதமான வமைதி கெடுதல் காரணமாகப் பல வியாதிகள் தொடரும். ஆகவே, தாதுபரீக்ஷையால் நோய்நிதானஞ் செய்கிற மருத்துவர்கள் மனநோய்க்கு மருந்துண்டா என விதிர் விதிர்ப்பர். அழுத

வனுக்கு ஆங்காரமில்லை. மனக்கவலை பலக்குறைவு. மனமயக்கம் ஸர்வமயக்கம்.

"சமுசாரக்குட்டு வியாதிரெட்டு" என்றபடி சமுசார சஞ்சலத்திஞனும் இராசிக தெய்வீசுமாக நேரிடுந் துன்பங்களாலும் வயது நிரம்பு முன்னரே நரைதிரை மூப்புமேலிடும். "உமக்கு மிக்க வயதாகியும் நரையில்லையே" என்ற சான்றோருரை நோக்கிப் பிசிராந்தையார்

யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் இளையரும். வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும். அதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழுமூரே. என்றனராம்.

வயிறு வளர்த்தற்குரிய லௌகிககாரியங்களைச்செய்து முடித்த பிறகு தினந்தோறும் சற்றுநேரம் ஏதாவது விநோத வேடிக்கைகளில் கழிப்பது மனத்துக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும். நல்ல சரித்திரங்கள் காவியங்கள் முதலியவற்றைப் படிப்பது மனத்துக்கு உற்சாகத்தை விளைக்கும். இதனோடு ஸங்கீதங் கேட்பதும் உண்மை நண்பர்களோடு வார்த்தையாடி வம்பளப்பதும் எவ்வகைக் கவலைக்கும் பரமௌஷதமாம்.

வைத்தியம் செய்துகொள்ளல். சலதோஷம் தலைவலி வயிற்றுக் கடுப்பு வயிறுதள்ளுதல் முதலான சில சில்லரை வியாதிகளுக்கு உண்டியில் காய்கறி கந்தமூலங்களை ஏற்ற பெற்றி வேறுபடுத்திக் கொள்வதே தக்க பரிகாரமாம். அவரவ ரனுபவத்துக் கியைந்தவாறு இங்ஙனம் வேறு படுத்திக்கொள்வது கஷ்டமன்று. அசாதாரணமான யாதொரு வியாதியின் குறி தேகத்திற் காணப்பட்டால், அது முற்றுகிரவரையில் பராமரிக்கையாக இராமல், உடனே தக்க வைத்தியரைத் தேடுவதே நன்று. நோயை ஆரம்பத்திற் களையாமல் முற்றவிட்டுப் பரிகாரந் தேடுதல் முளையில் நகத்தால் கிள்ளிவிடுவதை முற்றவிட்டுக் கோடரி கொண்டு வெட்டுவதை யொக்கும். நமது உடற்கூறறிந்த விடத்தில் சிகிச்சை செய்துகொள்வதே உத்தமம்.

கேவலம் எட்டுச்சுரைக்காயான வைத்தியரை நம்பாமல், சாஸ்திர ஞானத்தோடு அனுபவ முதிர்ச்சியுள்ள விருத்த வைத்திய வாகடத்தில் சிகிச்சை செய்து கொள்வதே யுக்தமாகும். "பால்யஜோசியம் விருத்த வைத்தியம்" என்றது மூதுரை.

நோய்நாடி நோய்முத னாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். என்பது மருத்துவனுக்குரிய லக்ஷணம்.

பழக்க வழக்கம். தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டில். இளமையில் தேசாங்கமாக ஏறிவிட்ட பழக்க வழக்கங்களைப் பிறகு மாற்றப் புகுவது எவ்விதத்திலும் கேட்டுக்கே ஏதுவாகும். தேசாசாரமான பழக்க வழக்கங்கள் அவ்வத் தேயத்தவருக்குக் காலாந்தரமான அனுபவ முதிர்ச்சியினால் ஏற்பட்டவை. ஒரு தேசத்திற்குளே அவ்வம் மாகாணத்தின் சீதோஷ்ண நிலைக்கும் தானிய தவச விளைவிற்கும் ஏனைச்சுற்றுச் சார்புகளுக்கும் ஏற்றவாறாகப் பழக்க வழக்கங்கள் வேறுபடுகின்றன. பாஞ்சால தேசத்தவருடைய உண்டியும் உடையும் சோழமண்டலத்திலும் பாண்டி மண்டலத்திலும் வசிப்பவர்களுக்குப் பொருந்துமா ? மலையாளிகளுடைய நடையுடை பாவனைகள் வங்காள வாசிகளுக்கு ஏற்குமா? "அரசன் வழிப்பட்டது அவனி" "அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி" என்பது உண்மையே. ஆயினும் உஷ்ணமண்டலத்தில் வசிக்கின்ற நாம் உத்தர பரிமித மண்டல வாசிகளான நமது துரைத்தனத்தாரது நடை யுடை பாவனைக ளனைத்தையும் ஒரு தலைமுறையில் அப்படியே மேற்கொள்வது யுக்தமாகுமா ? அவற்றில் யாதொரு கெடுதியில்லாமல் நன்மை தருவனவான சிலவற்றை மாத்திரம் வேண்டுமானால் தற்கால நாகரிக நிலைமைக்கேற்ப மேற்கொள்வது உசிதமாகும். தங்கள் தங்கள் வீட்டில் பாரம்பரியமாக அனுசரித்து வரப்பட்ட ஆசாரங்களையும் திடும்பிரவேசமாக மாற்றுதல் கூடாது. காலத்துக்கேற்ற கோலமாக, ஜீவனோபாயவேறுபாடுகளுக்கியைய உண்டி, உடை முதலியவைகளை நாளடைவில் சிறிது சிறிதாக மாற்றிக்கொள்க. தேசாசாரமான உண்டியுடைகளை மாற்றிக் கொள்வதினால் நாம் நாகரிகமுடையவராக மதிக்கப்படுவோம். நமது தேகாரோக்கியம் விருத்தியாகும் என நினைத்து மாறுவேஷங் கொள்வது நாடகதாரிகளுக்குரிய வேஷமேயாகும்.

(இதன் தொடர்ச்சியைத் தமிழ் உள்ளுறைத்தாளின் பின்புறத்திலே காணவும்.)

ON THE TWELVE NAMES OF THIRUMAL II.

திருமாலின் பன்னிருநாமப் பொருள்விளக்கம்.

4-வது நாமம் கோவிந்தன்.

கோவென்பது வடமொழிப் பதம். அது பூமி, பசு, வாக்கு எனும் பொருள்களில் வழங்கப்படுகிறது. "ஆவுந் தலைவனு மொளியு மண்டமும், பாருஞ் சொல்லும் பகழியுங் கண்ணுங், துலிசமுந் திக்கும் சலமுங்கோவே". இது பிங்கல நிண்டுச் சூத்திரம். இதில் கோவெனு மொழிக்குள்ள பல பொருள்கள் விளக்கப்பட்டுள்ளன. விதல் எனும் வடமொழிப் பகுதியி லுள்ள தகரம் மெல்லோசை கொண்டது. அதன் பொருள் லாபம் அதாவது அடைதல் என்பதாம்.

(க) கோவிந்தன். கோ=பூமியை, விதல்=அடைந்தவன் அதாவது பூமியைத் தன்வசம் செய்து கொண்டவன். இவைகளை விளக்கக் கண்ணன் வசுதேவ புத்திரனானதும், கஞ்சனையும் சராசந்தனையும் மேலுல கேற்றியதுமே போதுமான செய்திகள். இவை விருத்தாந்தம் வெளிப்படை.

(உ) கோவிந்தன். கோ=பசுவை யடைந்தவன். பசுக்களை ஆளுபவன் என்பதும்பொருந்தும். கோகுலத்தில் அதாவது ஆயர்குலத்தில் கண்ணன் அவதரித்தமையால் இப்பெயர் வழங்கலாயிற்று.

கண்ணன் பசுவையாண்ட கதை:—திருவாய்ப் பாடியில் ஆயர்களெல்லாருங் கூடி மழை பெய்யும்பொருட்டு இந்திரனை ஆராதித்தற் கென்று சமைத்த சோற்றைக் கண்ணபிரான் அவ்விந்திரனுக் கிடாதபடி விலக்கி கோவர்த்தன மலைக்கு இடும்படி சொல்லித் தானே ஒரு தேவதாரூபங் கொண்டு அமுது செய்தருள, அவ்விந்திரன் கோபங்கொண்டு புஷ்கலாவர்த்தம் முதலிய பல மேகங்களை யேவிக் கண்ணன் விரும்பி மேய்த்த பசுக்களுக்கும் கன்றுகளுக்கும் கண்ணனுக் கிஷ்டராகிய இடையருக்கும் இடைச்சிமார்களுக்கும் தீங்குண்டாக்கக் கல்மழையை ஏழுநாள் இடைவிடாது பெய்வித்தான். கண்ணன் கோவர்த்தனமெனும் மலையை யெடுத்துக் குடையாகப் பிடித்து மழையைத் தடுத்து எல்லா வுயிர்களையும் இடையூறு சிறிதுமின்றிக் காத்தருளினான். இதனால் தேவராசனையும் வெல்லத்தக்க எம்பிரான் சத்தியும் மனுஷ்யாவதாரத்திலும் அவ்வற்புதச் சத்தியைக் காட்டித் தன் அடிமைகளை ஆதரித்தருளும் வாற்சலியமும் விளங்குகின்றன.

இக்கதை பாகவத புராணத்துள்ளது. இந்திரனால் கண்ணன் கோவிந்தப் பட்டாபிஷேகம் செய்யப் பெற்றனன். அது கதையாவது:—

பிறகு இந்திரன் கண்ணனிடம் வந்து "தேவரீர் ஒரு திருக்கையினாலே, கோவர்த்தனவரையைச் சுலபமாய்த் தூக்கியதை என் கண்ணார நான் கண்டேனன்றோ? தேவரீர் சன்னிதிக்கு அடியேன் வந்துள்ள முக்கிய காரியங் கேட்டு அருளல் வேண்டு" மென்று பிரார்த்தித்தவன் "கோலோகத்தி லிராநின்ற கோக்களெல்லாம் தங்கள் சந்ததியைத்தேவரீர் காத்தருளியதற்காகத் தேவரீருக்கொரு சத்காரியஞ் செய்யவேண்டு மென்று அடியேனுக்கு நியமித்தன. அதனாலே கோக்களின் கோரிக்கைப்படி உங்களைக் கோக்களுக்கு இந்திரனாகப் பட்டாபிஷேகம் செய்கின்றேன். அதனைத் திருவுளம்பற்றியருளவேண்டும். அதனாலே தேவரீர் கோவிந்தனென்கிற திருநாமம் பெருவீர்க"ளென்று விண்ணப்பம் செய்து தன் வாகனமான ஐராவதத்தின் மேலிருந்து தீர்த்த கும்பத்தை எடுத்துவந்து தனக்கு மேலாய்ச் சத்திய லோகத்திற்கு மேலிருக்கின்ற கோலோகத்திலுள்ள கோக்களுக்கு இந்திர னாகையாலே உபேந்திரனென்று பட்டாபிஷேகம் செய்தான். இக்காரணத்தால் உபேந்திரன் எனும் பெயரும், கோவிந்தனெனும் பெயரும், பிறகு திருமாலுக்குக் காரணப் பெயர்களாக வழங்கப்பட்டன. விஷ்ணுபுராணம் 5-வது அம்சம் 12-ம் அத்தியாயத்தில் இக் கோவிந்த பட்டாபிஷேகம் கூறியிருத்தல் காண்க. துவாபரயுகத்தின் கடைசியில் கண்ணன் திருவவதாரம் செய்து இவ்வுலகத்திற் செய்த நன்மைகள் பலவாம்.

(௩) கோவிந்தன். வாக்குக்களை அடைந்தவன். இதனால் உலகுள்ளோர் கன்ம ஞானங்களைப் பகுத்துணர்ந்து பத்தி பிரபத்தி யெனும் மார்க்கங்களால் தன்னை யடைவதற்கு அர்ச்சுனனுக்குச் செய்த உபதேசமெனும் வியாஜத்தால் பகவற் கீதை உரைத்தமை விளங்குகின்றது. சிறந்த பேதனைக் கடந்த பல வாக்குகள் நிறைந்த நூல் பகவற் கீதையென்று உணர்க. இவ்வாறாகக் கோவிந்த பதத்திற்கு எழுத்திற்கு ஒரு பொருள் வீதம் மூன்றெழுத்தடங்கிய வொரு மொழிக்கு மூன்று பொருள்கள் அமைந்திருத்தல் காட்டப்பட்டன.

தேசிகப்பிரபந்தம் பன்னிருநாமப்பாட்டில் 4-வது நாமப்பாட்டு.

கலித்துறை.

கோவிந்த னென்னுங் குளிர்மதி யாகிக் கொடியவரை
ஏவுந் தனுக்க ளுடன்தெற் கிலுமுன் கழுத்துநின்று
மேவுந் திருவரு ளால்வினை தீர்த்தெம்மை யாண்டருளும்
பூவன் றெழுவத்தி மாமலை மேல்நின்ற புண்ணியனே.

நான்காவது புண்டர தேவதையினுடைய வர்ண ஆயுதாதிகள் இதிற் கூறப்பட்டன. மூர்த்தியின் நிறம் சீதள சந்திரன் ஒளிபோன்றது. நான்கு கரங்களிலும் நான்கு தனுசுகள் ஆயுதங்கள். தெற்கும் உள்கழுத்தும் இடம்

கள். "சதுர்புஜம் தனுஷ்மந்தம்" என்று தொடங்குவது மந்திரம். தெற்குத் திக்கிலும் உள் கழுத்திலும் இவ் வடிவத்துடன் நின்று அளிப்பதாய்த் தியானித்துக்கொண்டு நான்காவது புண்டர மிடுகை நியமம்.

தனுக்கள் வடமொழி நியாயம்பற்றி மூன்ருகாதோ வெனில், புஜம் நான்காதலின் பிரகரணம் பற்றி நான்கென்று சொல்லப்பட்டது. மூன்று முதற் பன்மை யென்பது வடமொழி வழக்கு. ஏவுந்தனு ஆளுந்தனு வெனக் கொள்க. பூவன் மாலின்உந்திச்தாமரையி லுதித்த நான்முகன்.

பசுக்களுக்கும் அந்தணர்க்கும் ஜகத்திற்கும் இதம் செய்பவனும் கிருஷ்ணனுங் கோவிந்தனே ஜபகாலத்தில் அந்தணர் "நமோப்பிரமண்ய" என்று துவக்கும் சுலோகத்தால் வணங்கும்போது முன்னிற்கும் நாமம் இக் கோவிந்தநாமமேயாம்.

5-வது நாமம் விஷ்ணு.

விஷில் எனும் வடமொழி வினைப்பகுதிக்கு வியாப்தி அதாவது எங்கும் பரவுதல் என்பது பொரு ளாதலால்

(க) விஷ்ணு என்பதற்கு எங்கும் பரவி யிருப்பவன் என்பது பொருள் ஜகத்தை வியாபித்திருப்பவ னென்றபடி.

பாரதத்தில் கிருஷ்ணன் 'ஏ அர்ச்சுனு! என் காந்தி எங்கும் பரவி யிருப்பதால் எனக்கு விஷ்ணு எனும் பெய ருண்டாயிற்'' றென்று அரச்சுனனைச் சுட்டிக் கூறி யிருக்கிறார்.

விசே: எனுந் தாதுவுக்குப்பிரவேசம் என்பது பொருளாதலால் எங்கும் வியாபித்திருக்கும் தேவனுக்கு விஷ்ணுவென்று பெயர் வந்ததென்று விஷ்ணு புராணத்தில் கூறப்பட்டது. ஸ்ரீ சங்கராசாரியார் சகத்திர நாம பாஷியத்தில் கிருஷ்ண நாமப்பொருள் விளக்குமிடத்து வியாப்திச் சுருதி ஆதாரங்காட்டி யிருக்கிறார். அதன் பொருள் நாம் பார்ப்பதும் கேட்பது மாகிய எல்லா வுலகத்திலுள்ள பொருள்களின் உள்ளிலும் வெளியிலும் வியாபித்திருப்பவன் நாராயணன் என்பதே. திடஞானம் உண்டாக விஷ்ணு நாமசங்கீர்த்தனம் செய்யவேண்டு மென்று இருக்குவேதத்தில் கூறப்பட்டுள்ளது. இதை யனுசரித்தே அந்தணர்கள் தங்கருமஞ் செயும்போது சங்கற்பஞ் செய்கையில் திதிவாரம நக்ஷத்திரம் யோகம் கரணம் இவைகளெல்லாம் விஷ்ணு அம்சம் என்றும் சகத்து அனைத்தும் விஷ்ணுமயமென்றும் ஒருவன் சுத்தனு யிருப்பினும் அசுத்தனு யிருப்பினும் எந்த சமயமா யிருப்பினும் விஷ்ணுவை ஸ்மரித்தால் உள்ளிலும் வெளியிலும் சுத்தியுண்டாகின்றதென்றும் சொல்லி யனுட்டித்து வரும் வழக்கம் நமது நாட்டில் நிலைபெற்றிருக்கிறது.

தேசிகப்பிரபந்தத்தில் 5-வது நாமப்பாட்டு.

கலித்துறை.

விட்டு விலவயிற் றின்கண் வடக்கும் விடாதுநின்று
மட்டவிழ் தாமரைத் தாது நிறங்கொண்ட மேனியனாய்
தொட்ட கலப்பைக ளீரிரண் டாலுந் துயரறுக்கும்
கட்டெழிற் சோலைக் கரிகிரி மேல்நின்ற கற்பகமே.

இக்கவியில் 5-வது புண்டர தேவதையின் நிறம் ஆயுதங்கள் இடம் கூறப்பட்டன. தாமரைத் தாதின் நிறங்கொண் மேனியுடன், நான்கு கைக ளிலும் நான்கு கலப்பைகளாம் ஆயுதங்களுடனும், வயிற்றின் வலது புறத்தி லும் வடக்குத் திக்குலும் திருமால் நிற்பதாகத் தியானம் செய்துகொண்டு வலது வயிற்றில் 5-வது புண்டரத்தைத் தரிக்க வேண்டும். "சதுர்ஹலதரம்" என்று தொடங்கும் சுலோகத்தைத்தியானிக்கையில் மந்திரமாக உபயோகித் தலும் வேண்டும். வேண்டுவார் வேண்டுவதை யெல்லாம் அளிக்கும் சிறப்பு விளங்கக் கற்பகமெனக் கூறப்பட்டது. விஷ்ணுவெனு மொழி தமிழில் விட்டு என நிற்கின்றது. நம்மாழ்வாரும் 2-ம் பத்து 7-ம் திருவாய்மொழியில் பன்னிருநாமக் கூறுகையில் "விட்டு இலங்கு செஞ்சோதி" யென்றுகூறி யிருத்தல் காண்க.

6-வது நாமம் மதுசூதனன்.

க. மதுவெனும் பெயர் கொண்ட வசுரனைக் கொன்றவன்=மதுசூத னன். ("ஸூத்") எனும் தகரம் மெல்லோசை வாய்ந்த வட மொழி வினைப்பகுதிக்குக் கொல் என்பது பொருள். சூத னன் கொன்றவன்.

மதுவெனும் அசுரனைக் கொன்ற கதை பாரதத்தி லிருக்கின்றது. இக் கொலைக் காரணங் கருதி "மதுரிபு" வெனும் பெயரும் திருமாலின் பெயரா யிற்று. ரிபு எனும் வடமொழிப் பெயர்ச்சொல்லுக்குப் பகைவன் என்பது பொருள்.

மதுவின்கதை. கற்பாந்தத்தில் விஷ்ணு யோகநித்திரையிலிருந்த போது அவரது இரண்டு செவிகளிலிருந்தும் மது, கைடபன் என்று வழ ங்கிவரும் இரண்டு அசுரர்கள் தோன்றினார்கள். அப்பொழுதிருந்த மகாப் பிரளய நீர் அவர்களுக்கு முழங்காலளவாயிற் றென்றால் அவர்களினுயர மதிக மென்பது கூறலும் வேண்டுமோ! பிரமனும் அப்பொழுதுதான் திருமாலின் நாபிகமலத்தில் தோன்றினான். பிரமனை அவ்விரண்டு அசுரர்களும் கொல்ல வெழுந்தார்கள். அவர்களைத்திருமால் சமாதானம் சொல்லி அடக்கிவிட்டு ஏதேனும்வரம் வேண்டுமாயின் கேட்டுக் கொள்ளும்படி கட்டளையிட்டார்.

" உனக்குவேண்டியவரம் கேட்பாயேல், யாங்கள்தருவோ" மென்று அவ்வசுரர்கள் மொழிந்தார்கள். "என்கையால் நீங்கள் மடியும்வரம் தரவேண்டு" மென்று கூறித், திருமாலவர்களிருவரையும் வதம்செய்து விட்டார். இது காரணமாகத்தான் மதுசூதனனுயினர். மதுவைரி-கைடபாரி என்னும் பெயர்களும் பிறகுவழங்கலாயின. கடபா அரி - கைடபாரி வடமொழிச்சந்தி.

தேசிகப் பிரபந்தத்தில் 6-வது நாமப்பாட்டு-

மதுசூ தனன் வலப்புயந் தென்கிழக் கென்றிவற்றில்
பதியா யிருந்து பண் மாதுறை பங்கய வண்ணனுமாய்
முதுமா வினைக ளறுக்கும் முசலங்க ளீரிரண்டால்
மதுவா ரிளம்பொழில் வாரண வெற்பின் மழைமுகிலே.

ஆறாவதுபுண்டர தேவதையின் நிறம் ஆயுதம் முதலியன இக்கவியில் கூறப்பட்டன. மூர்த்தியின் நிறம் செந்தாமரை நிறம். ஆயுதங்கள் நான்கு முஸலங்கள் (உலக்கைகள்) வலதுபுஜமும் தென்திக்கும் இருக்குமிடம். தியானத்திற்குரிய மந்திரம் **சதுர் முஸல மப்ஜாபம்** என்று துவக்குவது. கீழே கூறியபடி மூர்த்தியைக் கூறிய விடத்துத்தியானித்துக் கொண்டே 6-வது புண்டரத்தை வலது புஜத்தில் வைணவர்கள் தரித்தல் வேண்டும். பண்மாது இங்கு திருமகளைச் சுட்டிநிற்கின்றது. பண்போலும் சொல்லையுடையாமாது என்பதன்பொருள். மது=தேன், வார்த்தல்=ஒழுகுதல்.

தி. வேங்கடராம ஐயங்கார்.
தமிழ்ப்பண்டிதர்.

THE SHEPHERD AND THE PHILOSOPHER.

* இடையனும் கலைஞனும்.

இது ஜான்கே என்னும் ஆங்கிலகவி இற்றிய " முகவுரை" மொழி பெயர்ப்பு.

ஊதியச் சிந்தனை எதும் இலாமல்
நகரிகட் கப்பால் தகர்பல மேய்க்கும்
இடையன் ஒருவன் இருந்தனன். தலை எலாம்
வெள்ளிய நரையுடை விருத்தாப் பியன் அவன்.
அனுபவ முதிர்ச்சியால் அறிஞன் ஆயினேன்
கோடை கால வேலைப் பொழுதிலும்

---

* Metrical translation of "The Shepherd and the Philosopher" by Guay.

கார்கா லத்துக் கடுங்குளி ரதனிலும்
ஆடுகள் தமைமேய்த் தவனதிடை மறிப்பன்
களிப்புறு தொழிலிற் கழித்தனன் காலம்.
அழுக்கா றதிஅவா அவன்எதும் அறியான்.
புந்தியும் அவன்றன் புரையிலாப் புகழும்
பாரினில் எங்கும் பரப்பின இவன் பெயர்
பள்ளியி னின்றே பல்வகைத் தாய
நீதிசாஸ் திரமுறை நிரம்பக் கற்ற
வித்தக னொருவன் இத்தகை இடையனின்
புன்குடில் புக்குப் பின்வரும் விதமாய்
அவன்றன் அறிவை அளவிட லாயினன்:
“ இத்துணை கல்வியும் யாங்ஙுக் கற்றனை ?
எண்ணெய்ச் செலவில் எண்ணரும் நூல்கள்
நடுநிசி யிலும்நீ நன்றுகற் றனையோ ?
பண்டைக் கிரீஸ்ரோம் பார்த்து நீ பின்னும்
பிளேடோ பெருமதிப் பேணியாய்ந் தனையோ?
மற்றுநின் றன்மனக் களிம்ப கற்றியோன்
சாக்கிரட் டீஸோ? தல்லித் தன்னுடை—
நுட்டக் கருத்தெலாம் நுழைந்துகண் டனையோ?
யூக முள்ள யூலிஸிஸ் போன்று
சிறிதும்முன் னறியாச் சீமைகள் தோறும்
விதிமோ சத்தால் விடுக்கப் பெற்று
மார்க்க மொரீஇம்பல மாநகர் போந்து
நானு மாக்கள் நடை, உடை, பாவனை,
விதி,அறிந் தனையோ? விளம்புதி;’ என்ன
விநயத் துடனே விளம்பினன் இடையன்:
“ எழுத்துவா சனையே எனக்கிலை சிறிதும்
மானிடர் இயல்பும் மற்றவர் நியமும்
வித்தையும் அறியயான் வேற்றிடம் செல இலை,
நுட்பம் ஆய்குநர்தம் கட்புலன் களையும்
மாரீ சம்பயில் மானிடன் ஏய்ப்பன்
நம்மை நாமே நன்கறி யோமே
ஆயின், பிறர்குணம் ஆராய் வதனுல்
அறிவின் முதிர்ந்தோர் ஆகுவர் எவரே?
அற்பச் சொற்பம் ஆய என் அறிவும்
சிருட்டியி னின்றே திரட்டியவைதாம்,
ஓதிய ஈதி னின்றே உதித்த என்

மூவா வாழ்வின் முறைமையும் விதியும்
தீச்செயல் களையான் தீரவெறுத்தது
இன்னதின் னின்றே என்பதும் அறிக.
தேனீ தன்னின் தினசரி உழைப்பெனை
உலையா முயற்சி உளனாகியதால்.
எண்ணித் துணியும் எறும்பினைக் கண்டு
பின்னே வேண்டுவ இன்றே தேடா
திருக்க யாரால் இயலும்? தன்னினம்
தனில்மிக நம்பத் தகும் என்ன நாயே
நன்றி என்னும் நற்சுடரினை என்
உள்ளம் தன்னில் ஒளிரச்செய்தது.
திரேயின் பக்தியும் சிரத்தையும் பார்த்து
விசுவாசத்துடன் வேலையைச் செய்வேன்.
கபோதத்தி லிருந்து கடிமனக் காதலும்
பத்தினி விரதமும் பண்புறக் கற்றேன்
குளிர்காற் றடியா வண்ணம் குஞ்சினை
அன்பாதரவோ டணைத்துத் தன்னுடை
செட்டையிற் காக்கும் பெட்டைக் கோழியும்
உயரப் பறக்கும் ஒவ்வொரு பறவையும்
பெற்றோர் கடன்எனைப் பேணச் செய்தன.
இகழ்ச்சி குறளைகள் அகற்றவேண் டியவும்
பிரகிருதி யினின்றே பெற்றனன். அதனால்
விஞ்சிய கர்வம் மேலுறக் கொண்டே
எவரையும் என்றும் எடுத்தெறிந் துரையேன்.
ஆழ்ந்த சிந்தையதாய் அபிநயம் செய்யும்
ஆந்தையை இழியா மாந்தரும் உளரோ?
உண்மை யில்லா ஒப்பா சாரக்
கபடியை ஞானியாக் கருதுவர் எவரே?
வெகுபேச் செல்லாம் வெறும்பேச் சாகும்
ஆதலின் என்நா அடக்கி ஆண்டிடுவேன்
சொற்பொழி வென்னும் சோனையிற் றப்புவம்,
காகம் கரைதலைக் கருதுவர் எவரே?
சூழ்ச்சி உளங்கொடு துரோகசிந் தையனாய்
அயலான் உரிமையை அபகரிப் பதும்இலை:
கொள்ளைக் குணமே குடிகொண் டிருக்கும்
விலங்குக ளிடத்து வெறுப்புடை யோம்நாம்

திரே = குடியானவன் நாய்.

கோநாய் பருந்தும் கொடியவல் லூறும்
சங்கா ரஞ்செயப் படுவது சரியே.
டாய்பைத் தேரையைப பார்த்தமாத் திரத்தில்
வெறுப்புக் கொள்வது வெகுசரி யன்றோ?
வன்கண் குறளே வன்சொல் தீண்டுழியோ
நல்ல பாம்பினும் இவைநச் சுடைத்தாமால்
அவ்விதம சிருஷ்டியில ஒவ்வொரு பொருளும்
சிந்திப் பதற்காம் சிலகுறிப் புடையது
சற்குணம் உடையோர் சற்றும் பயனில்லா
அற்பப் பொருளினும் அறநெறி காண்பர்'!
இன்னணம் உரைப்ப இயம்புவன் கலைஞன்
" கியாதி யினக்குக் கிடைத்தது சரியே
உண்மை யிலேநீ உரவோன் எனத்தகும்
உத்தம குணங்களே ஒருதனிச் சான்றும்
இறுமாப் புறலால் இல்லா விஷயமும்
நூலா சிரியர் நுவல்வர் ஆதலின்
மாயப் பிலுக்குள மானிடர் போன்றே
பத்தகங் களுமே போலித் தன்மைய
(a) பகுதி விதிகளைப் படிப்பவன் எவனும்
(b) உள்ள படியே உண்மையை ஓர்ந்து
தக்கநன் னெறிகளைத் தான்கிரகித் திடுவன்.
பிரகரு தியினிற் பெற்ற இவ்விதிகள்
பாட சாலைப் பயிற்சிஇல் லாமலே
மானிடன் தன்னை மாசறு நடையில்
வல்லோ னாக்கவும் நல்லோ னாக்கவும்
புத்திமா னாக்கவும் போதிய" என்றே.

R. M, கோபால கிருஷ்ணையர்.

(a) பகுதி=பிரகிருதி
(b) உள்ளபடி=இருக்கிறபடி=ஐயந்திரிபு

கைநிறைந்த புத்தகங்கள்:—

1.	தென்னாட்டுச் சிரேட்டர்கள்	... ...	0	12	0
2.	விக்டோரியா மெய்க்கீர்த்தி	... ...	0	12	0
3.	இரசாயன சாஸ்திரம்	... ...	0	6	0
4.	சத்திய விஜயம்	... ...	0	4	0
5.	பன்னிரு பெண்மணிகள்	... ...	0	6	0

இவை யெல்லாம் **மதராஸ் விடரசி பூரோவிற்** கிடைக்கும்.

NATURAL HISTORY II.

ஜீவசுபாவ தத்துவ விளக்கம். 2.

SOCIAL INSECTS. பூச்சிக்குழாம்.

பூச்சிகள் நிறைந்த இவ்வுலகத்துப் பல தனித்தனியே வசிப்பன. சில மட்டுமே கூடி வாழ்வனவாம். அங்ஙனம் கூட்டுறவு கொண்டாடும் பூச்சிகட்கு இங்கு பூச்சிக்குழாம் (Social Insectis) என்னும் பெயரிட்டோம். இத்தகைய கூட்டம் நான்குவகைப் பூச்சிகளினிடத் துண்டு. அவையாவன: கரையான் (Termites, white ants) குளவி (wasps) எறும்பு (ants) தேனீ (Bees).

நாம் கூடிவாழ்வதைப் பற்றியும், அத்தகைய கூட்டுறவா லுண்டாம் பலன்களைப் பற்றியும் நாமே பறையடித்துக் கொண்டு, மானுட னொருவனே அறிவு நிறைந்தவன் அவனுக்குத் தாழ்ந்தனவே மற்றெல்லாப் பிராணிகளும் என்று உபந்யாசஞ் செய்கின்றோம். சற்று அவ்வுபந்யாசத்தை நிறுத்திப் பேசுஞ் சக்தி ஒன்றுமட்டுமே குறைந்த இச்சிறுபூச்சிகளையும், இவற்றின் மிக்க திறத்தையும், இவை செய்யும் வியப்பான கருமங்களையும் வர்ணிப்போமாயின், இவற்றிற்குத் தலை குனிந்து போதல் உத்தமமென்று உணர்வோம்.

பூச்சி முட்டையினின்றும் புழு (Grub) உண்டாகும். இந்நிலையிலிருக்குங் கால் மிகுதியும் அன்னாகாரமுண்டு வளரும். பிறகு புழு உருமாறிக் கூட்டுப்புழு (Pupa) வாகும். இந்நிலையில் அன்னாகாரத்தை வெறுத்துப் பட்டுப்போன்ற ஓர் பொருளால் தன்னைச் சுற்றிலும் ஒரு சிறிய கூடுகட்டி (Cocoon) அதற்குள் சிலநா ளிருக்கும். பின்பு கூடுடைந்து சிறு பூச்சியாக வெளிவரும். பூச்சிகளெல்லாம் இவ்வண்ணமே பல உருமாறி உற்பத்தியாகும். இப்பொது வான விஷயத்தை முன்னாற் சொல்லியது பின்வரும் சில விஷயங்கள் சுலபமாய் அறிதற்பொருட்டேயாம்.

கரையான் (Termites) இவை முக்கியமாய் உஷ்ணப் பிரதேசங்களில் வசிப்பன. இவற்றின் குழாம் ஒன்றில் நான்குவகைப் பெயர்க ளுண்டு. அவையாவன **பெண்கரையான்** (Female) ஆண்கரையான் (Male) அலிகள் (Neuters) ஒவ்வொரு கூட்டிற்கும் ஒவ்வொரு ஆணும் பெண்ணுமே இருக்கும். அவற்றிற்கு அரசனும் அரசியுமென்று பெயர்கொடுப்போம். அலிகளுள் இரண்டு வகையுண்டு. ஒருவகை ஊழியஞ் செய்பவர்கள் (Workers) மற்ற வகை யுத்த வீரர்கள். (Soldiers) போர்ச்சேவகர்கள் மண்டைபருத்து, அலகுகள் மிக வளரப்பெற்றவர்கள், கூட்டைப் பாதுகாப்பதுதான் அன்னோர் தொழில்.

ஊழியக்காரர்கள் செய்யும் வேலைபலவுண்டு. கூடுகெட்டுதல், மராமத்துச் செய்தல், ஆகாரஞ் சேர்த்தல், குஞ்சுகளைப் பாதுகாத்தல் முதலியவாம். அரசியும் அரசனும் முட்டை யிடுவதைத் தவிர வேறொன்றுஞ் செய்பவரல்லர்.

மாரிகாலம் நெருங்குங்கால் ஆணும் பெண்ணும் தமது அழகிய சிறகை விரித்தாடித்தாமிருக்கும் மாடத்தினின்றும் மாலையில்வெளிப்போம். மறுநாட் காலை தமது ஆட்டமும் ஓய்ந்து, இறகையு மிழந்து, மண்ணிற் புரண்டு கிடக்கச் சிலபறவைகட்கும் சில எறும்புகட்கும் சில மனிதர்க்கு மிரையாகும். இத்துணை துன்பத்துக் கிடையில் இரண்டொரு ஆண்பெண் தப்பியோடப் பார்க்கலாம். ஓய்வில்லாது ஓடித் திரியும் ஊழியக்காரர்களிற் சிலர் இங்ஙனம் மணக்கோலம் கொண்டு ஊர்வலம் வருவதைக் கண்டால் உடனே அவற்றிக்குத் தக்க மாரியாதை செய்து அழைத்துப்போய், ஒரு சிறிய மண்கூடு கட்டி அதிலிருத்துவார்கள். காமனுங் கணைகள் வீச ஆணும் பெண்ணும் அங்கு புணர, அரசி கருப்பந் தரிப்பாள்.

அக்காலத்தில் அரசி இரண்டு மூன்று அங்குல நீளமிருப்பாள். இரண்டு வருடகாலம் உயிர்தரிப்பாள். அரசியின் உப்பரிகையைச் சுற்றி ஒரு பட்டாளங் காத்திருக்கும். அதுவுந்தவிர மெய்காப்பாளர் சிலருண்டு. உப்பரிகையைச் சுற்றி எண்ணிறந்த வேலைக்காரர்களும் யுத்த வீரர்களும் அரசியின் ஆணையை எதிர்ப்பார்த்துக் காத்திருப்பார்கள். அரசி முட்டை இட இட அவற்றைப் போஷணச் சாலைக் கெடுத்துப்போவார்கள். அங்கு முட்டைகள் குஞ்சுகளாக மாறி வெளிவரும்.

கரையான்கள் மறைவிலேயே தங்கள் கருமங்களைச் செய்வன. ஊழியக்காரர்கள், தாம் போம் இடமெல்லாம் மண்ணுற்றரையின்கீழ்ப்பாதையுண்டாக்கி அதன் வழியாய்ப் பிரயாணஞ் செய்வார்கள். தங்கள் கூட்டிற்கு யாதாமொரு விபத்து வந்தாலும், பாதை இடிந்து போனாலும், அவற்றையெல்லாம் உடனுக்குடனே மராமத்துச் செய்வார்கள். ஓரிரவிற்குள் 34 கஜநீளமுள்ள கட்டிடம் எழுப்பி விடுவார்கள். அரசனும் அரசியு மிருக்குங் கூடந்தவிர மற்ற கூடுமுழுவது மிடிந்தாலும், முன்போல, மாடமாளிகை கூட கோபுரங்களுடன் ஒரு வருடத்திற் புது அரண்மனை கட்டி விடுவார்கள். அரசி பருக்கப்பருக்க அவளுக்குத்தகுந்த அறை அமைப்பார்கள். இவ்வித அலுவலுடன் ஆகாரத்தையுஞ் சேகரிக்கவேண்டும். அதற்காக மரங்களைத் துளைப்பார்கள். அவற்றினின்று மோர்வகைப் பிசினுஞ் சாறு மெடுத்து ஆகாரமாக உபயோகப்படுத்துவார்கள்.

வேறுஒரு கூட்டத்தார் வந்து எதிர்த்து மதில்களில் துவாரஞ் செய்வரேல், திடீரென்று வேலைக்காரர்கள் மறைய, போர்புரியுஞ் தொழிலையுடைய யுத்த வீரர்கள் உடனே வெளிவருவார்கள். முதலில் சிலர் மட்டு

மே வந்து வேவுபார்ப்பார்கள். பிறகு சிலர் பலராகி யுத்தஞ் செய்வார்கள். எதிர்க்குங்கா லுண்டாங் கோபமும் ஆவேசமும் சொல்லுந்தரத்தவல்ல. அவசரத்திற் கைகால் தவறிக் கீழே உருண்டு விழுவார்கள். விழுவதற்கு முன் எழுந்து நிற்பார்கள். சண்டை ஒய்ந்து எதிரிகள் மறைந்தவுடன், போர்வீரர்கள் களைப்பாறத் தங்கள் கூட்டிற்குத் திரும்புவார்கள். உடனே ஊழியக்காரர், போரினுலுண்டாகிய உடைவுகளைப் பழுது பார்ப்பார்கள். இரண்டொரு யுத்த வீரர் வேலை செவ்வனே நடக்கிறதா வென்று மேற்பார் வைபார்க்க, மதில்களெல்லாம் முன்போலானதும் எல்லாருங் கூட்டில் மறை வார்கள். அம்மம்மா! என்ன எச்சரிக்கை! என்ன ஜாக்கிரதை! என்ன தேசாபிமானம். ஜப்பானியரிடத்தும் இவ்வளவுண்டோ!

குளவி (Wasp) இதிற் சில ஜாதிகள் மட்டுமே கூட்டமாக வசிப் பன. ஒவ்வொரு குழாமும் ஆண் பெண் அலிகளாலானது. பெண்களி விர ண்டுவகை யுண்டு. ஒன்று ஆண்முட்டை பெண் முட்டை என்னும் இரண்டு குழா முட்டைகளையு மிடும். மற்றொன்று ஆண் முட்டைகளை மாத்திரமே யிடும். மாரிகாலத் துவக்கத்தில் பெண் குளவி தவிர மற்றவை யெல்லாம் மரித்துப்போம். தனியே விடப்பட்ட பெண் ஒன்று மட்டுமேதானுக மண் ணினுலாவது, மெழுகினுலாவது கூடு கட்டி முட்டை யிடும். கூட்டின் ஒவ் வொரு அறையிலும் ஒவ்வொரு முட்டையையும், மற்றப் பூச்சிகளின் புழுவைக் கொன்றதுங் கொல்லாததுமாய் தன் முட்டைக் கிரையாக வைத்து அறை யின் வாயை மூடி விடும். இப் புழுக்களை உண்டு பருத்துச் சிலகாலஞ் செல்ல முட்டையினின்றுங் குளவி வெளிப்போம். பெண்குளவிகளே ஒரு கூட்டத் தில் மிக வுள்ளவை; ஆண் அவ்வளவு இல்லை. இவை கூடுகளைச் சுத்திசெய் வன. பிணங்களை அப்புறப்படுத்துவன. அலிகள் எண்ணிறந்தவை. கோ டையிலும் இலையுதிர்காலத்திலும் வெளியிற் சென்று ஆகாரஞ் சேர்த்து அதிற் சிறிது பாகத்தைக் குஞ்சுக்காக வைத்துவிட்டு, மற்றைய பாகத்தைச் சரியாய்ப் பங்கிட்டுண்ணும். இவற்றின் முன்யோசனையும் சாவதானமும் யாவர்க்கும் வியப்பைத் தரக்கூடியனவே.

எறும்பு (Ants) எறும்புக் கூட்டங்களில் ஊழியக்காரர்களுக்கே போர்த தொழிலும் உரித்து. அரசிகள் சிலருளர். பொறுமைகொண்டு ஒன்றோடொ ன்றுஎதிர்த்துப்போர்செய்யாது ஒற்றுமையுடன்வாழும். ஆணெறும்புகள் அர சியரோடு புணர்ந்தபிறகு, இவ் வுலகத்தின்ப முழுதையும் வெறுத்தனபோல், உயிர்நீக்கும். அரச ரிறந்ததைக்கண்ட பட்டமகிஷியர், தமக்கு வந்த துன்பத் தை நினைத்துருகி, தமக்கு ஆடையாகவும் ஆபரணமாகவு மிருந்த இறகுகளைத் தாமே கொய்தெறிந்து விட்டு அமங்கலிகளாகிய தம்முகத்தை வெளிக்காட்டா மல் கூட்டிலேயே வாசஞ் செய்வார்கள். இத்தகைய அன்பு, உலகவெறுப்பு, விசுவாசம் முதலிய குணுதிசயங்களைப்பற்றி நாம் மிக எழுதவும் வேண் டுமோ?

கோடைகாலப் பிற்பகுதியில் இறகு கொண்ட ஆணும் பெண்ணும் எழும்பிப் புற்றுமுழுவதிலும் நிறைந்துபோம். திடீரென்று ஆணெறும்புகள் சத்தஞ் செய்துகொண்டு ஆகாயத்திற் புறப்படும். அவற்றை அரசியரும் பின்றொடர்வார்கள். ஆகாயத்தில் இவை நிறைய, ஆண்கோணலாய் அங்குமிங்கும் பறப்பதையும், பெண் இறகை நன்றாகவிரித்து அந்தரத்தில்அசைவின்றி நிற்றலையும் கண்ணுளோர் பலமுறையுங் கண்டிருப்பார்கள். அரசி கம்பீரமாய் விர்விர் என்று ஆகாயத்தி லெழவே, அதனைக் கண்ட ஆண் எறும்புகள் பல அவளைக் கைப்பற்றுவான் வேண்டி, தமயந்தியின் சுயம்வரத்திற்கு வந்து கூடின பல அரசர்கள்போல் அவளைச்சுற்றி வட்டமிடும். நளனைப்போற் பாக்கியம் பெற்ற சில புருஷர்கள் மட்டுமே பெண்டிர்களால் அங்கீகரிப்படுவார்கள்; ஆகாயத்திலேயே காந்தர்வமணம் புரிவார்கள். உடனே ஆண் மரிக்கப் பெண்ணும் தன்னழகிய சிறகை எறிந்து துன்பத்திலாழ்ந்து கிடக்கும். அத்தருணத்தில், இயற்கை யறிவு நிறைந்த ஊழியக்காரர்கள் அதனை எடுத்துச் சென்று தகுந்த இடத்திற் சேர்ப்பார்கள். அங்கு பணிவிடை பலவுஞ் செய்து அன்ன மூட்டி ஆசனத்திருத்துவார்கள். பட்டாபிஷேக காலங்களில் நடக்கும் உற்சவங்கள் பலவாம். சில ஆடுவன; சில ஓடுவன; சில குதிப்பன; சில ஆரவாரிப்பன; சில அரசியரைத் தூக்கி ஊர்வலம் வருவன.

அரசி முட்டையிடவும், அவற்றைத் தம் வாயாற் கவ்வி ஊழியக்காரர் தனித்தனி அறைகளிற் சேர்த்துக் குஞ்சுபொரிக்கும் வரையிற் பாதுகாப்பார்கள். ஆகாயத்தின் சீதோஷ்ணஸ்திதிக்குத் தக்கவாறு முட்டைகளை வெவ்வேறு இடம் மாற்றுவது முண்டு. புழுக்களுக்கு அன்னமூட்டி, அவற்றைத் தம்நாவினால் சுத்திசெய்து நல்ல வெண்மையாக வைத்திருக்கும். சில சமயங்களில் முட்டையை யாரேனும் மிதித்து விட்டால், மண்ணோடு கலந்த முட்டைகளை ஒவ்வொன்றாய்ப் பிரித்துப் புற்றிற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும். வளையை மராமத்துபார்க்கும். எறும்புப் புற்றொன்றைக் கண்ணால் நாம் காணில் அதனிலு மதிசயக் காட்சி யுண்டோ! ஒரு புறம் முட்டைகள் குவியல் குவியலாய்க் கிடக்கும். ஒருபுறம் புழுக்கள் வெள்ளியங்கிரிபோல் விளங்கும். ஒருபுறம் குஞ்சுகட்கு ஊழியஞ் செய்வார் அன்ன மூட்டுவார். மறுபுறம் பாதை முதலியவற்றைச் சுத்தமாக்குவார். வேறொருபுறஞ் சில கைவிரித்துப் படுத்துக்கொண்டு இளப்பாறும்.

(இன்னும் வரும்)

V. N. IYENGAR, M. A.

சூளாமணி நாடகம்.

அங்கம்— 1.

களம்— 2.

இடம்—அரயன் மந்திரச்சாலை.

காலம்—காலை.

(வேந்தனு மமைச்சனு மாராய்ச்சி செய்தல்)

அரசன்:—முக்கா லந்தெரி மூதறி வுடைய
அமாத்யர்கா ளாங்ஙந் நிமித்திக னறைந்தது
ஸம்பவ மோவலா தஸம்பவந் தானோ?
ஆய்ந்தெற் குணர்த்துமி னையமி னுவலீர்!

மந்திரிகள்:—தகைமைசா றராதிப! தண்ணளி வள்ளலே!
திவிட்டனின் குமரன் றிரைகடல் வளாக
மாதிர முழுதையும் வளரறங் கோழை
படாதனு ரெய்தா தாளுவான் பாராய்.
ஆயவ னுதித்த வஹஸினி னிமித்திக
ரிங்ஙன மேமொழிந் துள்ளா ரேந்தலே!
அதான்றியு மன்னு னங்கைபா னந்தின்
வரியுந் திகிரியின் வான்ரே கையுமலா
தநந்தநற் குறிக ளவன்பா லுள்ளன.
ஆதலா லவனிவ் வவனியை யாள்வதற்
கையமே யிலையா லாழிமா சங்கந்
தாங்குவா னெறிதிரைத் தண்கட லுப்ப
ணுகணைப் பள்ளி நாரா யணனிகர்
ஆகுவான் காணுதி யந்நிமித் திகனுரைச்
சற்றும் பழுதுரு சான்றவன் றகைமை.
விஞ்சையன் மகளை விரும்பிக் கொணர்ந்திவண்
திவிட்டன் களிப்புறத் திருமணம் புரிவித்
தேகுவ னுடே னந்தலே வறிதியால்.
அங்ஙன மாகுமே லதற்கிணை யாதுகொல்?
ஆதலி னுனீ யப்பொழி லிடையே
சிலைமண் டபத்தைச் சீர்பெற வாக்கி
எனுள் காறுமி னியனங் காவலன்
துருமகாந்தனை தூய்ததற் காளா
யிருக்கச் செய்தியா லேந்தலே வாழி.

அரசன்:—"நன்று சொற்றனிர் நன்மூ தறிவுளீர்!"
(எனநக் கானு) யென்னுழை யீர்காள்!
அன்னகா வலனே யழைமினீ ரீண்டே.

மந்திரிகளில் ஒருவர்:— } (ஓடி) காவலோய், துரும காந்தனே, ஓடிவா
காவல ரழைக்கிறார் காணுதற் பொருட்டே.

துருமகாந்தன்:—"வந்தேன் வந்தனல் வள்ளறம் மாட்டே"
எனச்சொற் றனு யேந்தலே யண்மி
அண்ணல், சரண மாண்டகாய், சரணங்
காவலோய், சரணங் கட்டளை யாதோ?

அரசன்:—துரும காந்தனே! துய்யநம் புட்பமா
காண்டப் பொழிலிலாங் கன்மண் டபத்திடை
நாலிரு நாட்களு நற்கா வல்புரிந்
தாண்டை யடைவரு மந்தமெய் விஞ்சைய
வொற்றனைக் கொணர்தி. ஓடாங் கிங்ஙனே.

துருமகாந்தன்:—கட்டளைப் படியே காவல்செய் வேனல்
புட்பமா காண்டம் போவனு லின்னே
சரதஞ் சரதமால் சாருவேன் பொழிலே.

அரசன்:—சாலவு நன்றே தனிமே தகவுள
உழையீ ரவரவ ருழைசெல் குதிரால்.

மந்திரிகள்:—ஆயினம் மரசே, ஆகுவே மகமே.

(மந்திராமந்திரம் விடுத்து இயாவருந் தத்தம
துறைவிடஞ் செல்ல, துருமகாந்தன்
பொழிலிடைக் காவல்
செயல்.)

அங்கம்—II.

களம்— 1.

இடம்—இரதநூபுரச் சக்கிரவாளபுரம்.
காலம்—வசந்தம்.

(அரயன் றமரோடு பொழில் விளையாடல்.)

சுவலனசடி:—அம்புலி சிகர்த்த வணிமுக வனப்பினய்!
கார்கிகர் வேணியாய்! காயா மலர்க்கணய்!
குண்டல மணிந்த கோதினற் செவியினய்!
எட்பூ நாசியா யின்னத ரத்தினய்!
சித்திலம் புரையு நீமநல் லெயிற்றினய்!

கம்புளே வுறழுங் கந்தரத் தணியினுய் !
கஞ்சுலி கையுற வீக்கிய கனதனக்
குடந்தவ ழுரத்தினுய்! குங்குமத் தோளினுய்!
நருவுமி ழிளங்கதிர் நறியபூந் தெங்கலாய் !
வடத்தடை யுறழும் வளரிளங் குக்கியாய்!
புனற்சுழி யன்னப் பொருந்திய வுந்தியாய் !
சகனத் தணியினுய்! சக்கிரிப் பணசிக
ரல்குலா யஃணிபட் டாடையா யரம்பையை
மானுங் குறங்கினுய்! மலர்ச்சர ணத்தினுய்!
வாயுவே கையே! வருவாய், ஞமலிக
ளிரீஇத் தோகையை விரீஇ யிளந்தளிர்
கோடரத் திடையே குலவவு நாகனங்
குளிர்புன லோடைவாய் கொய்கொளக் கிடக்கும்
மனேவனம் புகலாம் மாதுசின் னெணம்யா
தோயா னுணர்கிலேன் சொல்லாய் பைந்தொடி!

வாயுவேகை:—எந்தலே! கற்பகக் காநாட் டிறைபுரை
கொழுநரே! கோதிற் குவலயம் புரக்கும்
இறையவர் மணிமுடி யுறிஞ்சு மிருசரண்
கழலணி யீரக்! கனிமலர்ச் சோலையைத்
தானுங் காணவென் றனிமனம் விழைந்ததால்,
வம்மின் வம்மினெம் வள்ளலே! வாரீர்.

இதற்குள் தோழி வஸந்தமாலிகை:— வள்ளலே, வசந்தகாலம் வாய்த்ததால்
யுவதியாய் சுயம்பிரபை யொளிர்பவ ளாயினுள்.
பின்னிய கூழையள் பிறைவத னத்தினுட்
கெழிலுறு கடிமண மியற்றத் தகுமரோ.
ஆதலா லவட்கியை யலங்கலே வேட்பவன்
எக்கா ஊகொலோ வேகிநங் கடவுள்மாட்
டிறைஞ்சிக் கேட்பிரா லென்மொழிப் படியே
எகுதி ரைய வின்றீண் டிருந்தே.

சுவலனசடி:—"ஓ! ஓ!! சரிசரி, யுத்தமி யுரைத்தது
ஒக்கும் ஒக்குமா லுண்மையால் செல்வேம்.
வாயுவே கையே! வருதியான் மனேவி,
சுயம் பிரபை நங்காய்! தூய்மலர்க் குழலாய்!
மகளே ! வருதியென் மாமக ளே! வள
ரருக்க கீர்த்தியே! ஆகுவா யூடே"
ஏனக்கிளத் தாறுயிகுளேயர் சூழ்வர,

அரியினுங் களிற்றினு மணிவிமா னத்தினு
மிவர்ந்தன ராகி யியாவருஞ் செலுங்கால்,

அநுக்ககீர்த்தி:—தந்தாய் ! தடவரைத் தாமிது யாதோ ?
விளம்புதி ரைய! விலங்கலின் வளனெலாம்.

சுவலனசடி—பூவுல கம்புரை பொதுளிய வளங்கொளு
மஞ்சுதோ யுயர்வரை மைந்தரோ டாடிய
அஞ்சில் லோதிய ரரரள கப்பொடி
பஞ்ச ராகம் பதித்தநற் பளிக்கறை
துஞ்சு பாரைகண் மேற்றுதை வுற்றுப்
பாய்புனன் முழுதும் பளகறப் பயின்ற
ஞானிய ருளம்போ ஞளுமாங் கிலகி
யுறலா லுரக வொண்டொடி யாரெலா
மூழ்கித் திளைப்பதான் முதுநீர் மல்லிகை
நறுமணங் கமழ்தர ஞான்றும் பெருகுமால்.
ஆண்டுள மலரெலா மம்பொற் ருமரை
யியையுமா னந்தன மனைத்து மிந்திரன்
கற்பகக் காவெனக் காண்டற் குரியதால்;
மதியந் தன்கோ டரிஞமாண் பிற்ருய்
வனப்புள தாகி வனங்கொண் டொளிருமால்.

சுயம்பிரபை:—நக்குநக் காளாய் நல்லவா வொடுமிளிர்
கண்வனப் புடையளாய்க் காவல னவிளித்
தெந்தா யெந்தா யென்னுயி ரண்ணலே !
இச்சுரக் காட்சியை யினதுகாண் பிப்பிரால்.

சுவலனசடி:—மடவரா லிம்மா மனேவனச் சோலைவாய்
ஆகிய வசோக வருந்தளிர் களைநுங்
கரங்களுக் கிணையாக் கழறலு மாகுமால்.
வல்லிக் குந்தநும் வளரிடை யொக்குமால்
மாந்தளி ரிவைநும் மேனியை மானுமே
முருக்கித ழிவைநும் முகவாய்ப் பகையாம்
குயில்களா மிவைகளின் குரவையுங் குமரிகா
ளுங்கிள விக்கிணை யுரைக்கவு மாமரோ.
கோங்கரும் பிவைநுங் கொங்கையை மானுமால்.
அரிவைகா ளிப்பே டனங்களிவ் வருவியின்
மணற்றடத் துலாய வருமவை காண்டிர்
நுந்நடைக் கியைய நுவலவும் பாற்றே.
வராலின மிவைநும் வாணுதற் கண்களுக்
கிடையப் பேசவு மினிதே யாகுமால்.

கிள்ளையும் பிள்ளைகள் கிளவிகட் கியைய
வரற்றுமால் வண்டர்பாண் செயவருந் துளிநறு
வுமிழிளங் கதிர்மல ரொசிதரத் தாவிநீர்
கொய்யக் கிடப்பன கோதையீர் காண்டிர்.
மதுபிலிற் றொளிரு மலரருந் தொங்கலீர் !
இடையருங் கானக் கின்னெற் யாமெனக்
காட்டிப் போவபோற் கலைமா னினங்கள்
விரைந்தோ டலைநீர் விருப்பொடு காணுதிர்.
அம்பொற் கலைதரி யரம்பைய ரன்னத்
தெரிவைகாள் ! சுண்ணந் தீட்டிய கொங்கையீர் !
"பிறந்தபோழ் திறப்பு முண்" டெனப் பேசக்
கிடக்குமவ் வசனங் கிளர்தரக் காட்டும்
வகைத்தா யிந்த மனோவனத் திடைசெலும்
அருவியி னிடைநிமி ரலர்புளி னங்கள்
மேனீத் தத்தினுன் மெலிவுறக் கறைந்து
பண்டைபோற் காணப் படர்தரப் போவதைக்
காண்டிர் காண்டிரால் கரியநற் கூந்தலீர் !
மதர்த்தறி விலிகள் மாண்புசா லறிஞர்
உழைதா மாக வோடியாங் கியலா
வினுக்களை விடுக்க மேதா வியரவர்
மறுக்கொணு விடைகடா வலுமனங் கொள்ளா
தபமா னத்தரா யனுரெய் துநரைக்
குறிப்பபோற் கூழைக் கடாக்கட் கொம்பரைப்
பேரிய மதத்தினுற் பைம்பா லொடுதெளிர்
கொள்ளக் கிடக்குமோர் கொம்பர் தருக்களி
னுப்பண் செலுத்தி நடுக்குறச் செயலால்
"பசுமரத் தாணி" போற் பாய்ந்துப் பெயர்க்கொணு
தாகவக் கடாக்க ளக்கொம் பர்களை
வெகுளிமீக் கொள்ள விதிர்ப்புற வீர்த்தலும்
ஆதியோ டவைக ளம்மரத் தேயொடிங்
தாகலான் மதர்மகி டங்களாங் குதிரப்
பெருக்கினுல் வெய்துயிர்த் திருக்கலும் பெருஞ்சம்
புகம்பல புகுந்தவண் பொசிதருஞ் செநீரை
வீணத்தொடு நுகர்வா னிற்கக் காண்டிரால்.

வாயுவேகை:—பூக்கொய் குநரே ! பொழில்விளை யாட்டுப
போது மாண்டுள பொற்சின கரத்தை
நோக்குதி ரிகுளையீர்! நொய்திலாண் டேகி

புக்குளக் கடவுளைப் போற்றுதும் வாரீர்.
சுயம்பிரபை :—ஓ ! ஓ ! ! அன்ன யோதுவ லென்னே ?
ஒப்பனை செய்துநா மூயர்கோ வில்புகுந்
தக்கட வுளைத்தொழ வாகுமா லென்னே ?
அண்ண லகனிலை பரும்பெய ரறைகுதிர்.
சுவலனடி :—"கண்ணே னினைது காமுறு மெழிலியைக்
கண்டுவேட் டற்கியற் காளையை வருமுனே
இயம்பற் குரித்தா மிக்கட வுள்பெய
ரருகக் கடவுளென் றறைவர் போதியால்.
யானு மடைகுவே னியாவரும் வாரீர்''.
என்னலுஞ் சுயம்பிரமை யேற்றுநா ணினளாய்ச்
சிரஞ்சாய்த்திருக்கச் சிறிதுநக் கானய்
அருக்ககீர்த்தி :—"ஆயி னண்ணலே, அவண்செலக் கூடும்
மறுக்கொணு தைய! மாட்சியோ டிவளை
அழைத்தே குவமா லப்பனே வாரீர்''
என்னச் சொற்றலு மினிதெனக் கேட்ட
தோன்றல் சுவலன சடிமிக விழைந்து
கடவுட் கிடும்பலி கரித்தினி தேந்தி
யாவருஞ் சூழ்வர யானம் விடுத்து
யாமிக் கியல்பதி யாரெனக் கேட்க
இயாரிகொள் சினகர வேந்தலை யண்மி
பத்தாஞ் சவியனுப் பவியிடு வித்துத்
தமரொடு துதித்தனன் றுணுவைவ யாண்டே.
விகரிலா வதிகுண னிருமா லியத்தைக்
கோயி லாவோன் கொடுத்துக் கழியலும்
அம்பரத் திரீஇ யருளிய பார்வைசேர்
திகம்பர ராகத் திசாமுக மொளிர்தர,
இழிந்தா லயத்தை யினிதினிற் சுற்றி
யருகக் கடவுளி னடிதொழு தாங்கே
சாரணர் :—(வின்றம் மன்னனை):—"விகரிலோய்! குசலமோ?"
என்றவர் சிலைவயி னிருந்தன ராண்டே.
சுவலனசடி :—குசலங் குசலமெங் குலமுனி வரரே!
அஞ்சலித் தனனு லாட்கொள வேண்டினேன்.
சாரணர் :—ஆசிவோ மன்னு! ஆகுவா யீங்கே
எதிவனுக வேந்தனின் காரணம்
அரைகுதி யைய! அடிகள்பா லின்னே.

வி. கே. அரங்காசாரியர்.

SARASWATHI.

ஸரஸ்வதி.

III-வது அதிகாரம்.

பாரிஸ்பட்டணம்.

நாமடைந்துள்ள மனம்--அணுவா, மகத்தாவென்று அனேகம் வேதாந்திகளும் சித்தாந்திகளும் வழக்கிட்டு மாஸக்கணக்காய்க் காலத்தைப்போக்குகின்றனர். நமக்கு எட்டுமளவில் மனம் அணுவும் மகத்துமாகவே உள்ளதென்றுகொள்ளத்தக்கது. காலதேச வர்த்தமானங்களும் அதை விட்டுக்கிடையா. காலமும் தேசமும், காரணகாரிய பாவமும் மனேசிருஷ்டியே யன்றி வேறல்ல. பம்பாயைப்பார்த்துத் திரும்பிய ஒருவன் சென்னையில் வசிக்கும்போது பம்பாய் என்னும் சொல்லைக்கேட்ட மாத்திரத்தில், பம்பாயைப் பிரத்தியட்சமாய் கண் கண்டதையொத்த தோற்றத்தைப் பெறுவது எப்படி? கண்ட கண்கள் சென்னையின் ஒரு மூலையிலிருக்க, இப்போது அந்நகரைக்கண்டதெதுவென்று விசாரிக்கப்புகுவோமானல், மனமே யதை யறிந்ததென்று முடிவு செய்வோம். இம்மட்டோ? மனசின்பெருமை தேசமென்ன, கண்டமென்ன, அண்டமென்ன, பகிரண்டமென்ன-இவையாவையும் தன் கர்ப்பத்திலடக்கிக்கிடக்கும்.

இத்தகைய மனமே ஒடுங்கவும், விரியவும், வியாபாரம் செய்யவும் ஆதாரமாயுள்ள **ஆத்மா** யாவற்றையும் உள்ளடக்கி மனதீதமாயுள்ளதென்று வேதம் கூறுவதிலாட்சேபனை யென்னை? மஹாகாசம் சிதாகாசத்தில் பயப்படுமென்பதூ அசம்பவமாகுமோ? நிற்க,

நாம் (எ)ன்னும் மனேதவியால் கிழக்கைவிட்டு மேற்கேசென்று, காடுமலை வனம் வனந்தரம் சாகரங்களை இச்சை வழிகடந்து, நெபோலியன் வாழ்ந்து தாழ்ந்த பிரான்சு தேசத்தின் ராஜதானியாகும் பாரிஸ் நகரையடுப்போமாக.

இப்பூவுலகில் நாகரீகம், கல்வி, செல்வம், ஞானம் முதலிய விர்த்திகளால் சற்றேறக்குஸறய லண்டனை யொத்த சிறப்பையடைந்த பாரிஸ் நகரின் அழகிய காட்சியை ஆதிசேஷனே வெளியிடத்தக்கவன். அவனாயிரம் நாவும் ஆயிரனாளும் புகழ்ந்து சொன்னாலும் பாரீசின் அருமை பெருமை முற்றும் வெளிப்படா. எம்போலியர் எத்திறத்தால் அதை அளவிட்டுச் சொல்வோம்! அந்தரமார்க்கமாய்ச் சென்ற கந்தர்வர் கூட்டம் அதை மலைத்து நின்று பாரப்பார்கள் என்றே நாம் கூறுவோம். இது உபசாரமல்ல; உண்மையேயாம். முன்னொருகாலத்து தென்தேச மார்க்கமாய்த் திருவுலாவந்த சங்

கரனைப் பின் தொடர்ந்த சிவகணங்களில் ஒருவரான குபேரன் காவிரிப் பூம்பட்டணத்தைக் கண்டு இச்சை வளர்த்த நிமித்தத்தால் அந்த க்ஷேத்திரத்தில் அவதாரம் செய்து பூலோக போகத்தைத் துய்த்துக் கைலையடையப் பரமன் கட்டளை நேர்ந்ததென்று பட்டினத்தடிகள் புராணத்தில் கேட்கப்படுகின்றமையால், கந்தர்வர் குழாம் லண்டன் பாரீஸ் நகர்களைக் கண்டு மயங்குவரென்பது அசங்கதமாய் ஒதுக்கத்தகுந்ததோ?

மேலும் ஐரோப்பியர் கந்தருவ வமிசத்தர் என்னும் நம்பிக்கை நம்மவர் அனேகருக்கும் உண்டல்லவா? ஐரோப்பிய ஸ்திரீகள் அணியும் உடையே இதற்கு சான்றுபகரும் என்றுகூறும் சில பண்டிதர்களை நாம் கண்டுள்ளோம். கந்தர்வ வமிசத்தாராகா திருந்தாராயின், போகர் ஐரோப்பாவடைந்து சகல சாஸ்திரங்களையும் அவர்கட்கு உபதேசித்திருப்பரோ? இரார், இரார். இதை முற்றும் சாதிக்க நம்பாட்டிமார் அனேகர் வக்காலத்து பெற்று வாதிப்பதையும் நாம் ஆங்காங்கு காண்பதில்லையோ? நிற்க, நாம் மனோவேகமாய் பாரீஸை அடைந்த விஷயத்தைக்குறித்து இப்போதுபேசத்தொடங்குவோம்.

நகரின் மத்திய பாகத்தில், மரித்த மூன்றாம்நாள் தூலதேகத்தோடு தேவகணங்கள் புடைசூழ்ந்து வாழ்த்தித் தேவகானம் முழங்கத் தேவகுமாரன் சுவர்க்கத்தை யடுத்துச் சென்ற கண்காட்சி அவர் சீடருக்கு விளைவித்த பிரமமானந்தம்போல் அப்பெரியரிற் பெரியன் அருட்பிரபாவத்தைக் காட்டும் அறிகுறி போல் மகோன்னத சிகரத்தை யடைந்து சிறந்த சிற்பிகளால் அலங்காரமாக ஆக்கப்பட்டு சுத்த சாமான்யர்க்கும் தெரிசித்தவளவில் சுகாநந்தத்தை ஊட்டத் தகுந்ததாய்க் கிடந்த கிறிஸ்தவ தேவாலயத்தின் முகட்டில் வைக்கப்பட்டிருந்த கடிகாரங்கள் வாயைத்திறந்து வெங்கலமென சப்தித்த சப்தத்தால் மணி யொன்பதாயிற்றென்று பிரஜைகள் கண்டு அவரவர் கிருகத்தைநோக்கிப் பரபரத்துச் சென்றார்கள். அந்த சமயத்தில் பூதபௌதிக சாஸ்திர பாண்டித்துவ அபிவிர்த்தி சபையில் அன்று மாலை நடந்த அரிய உபன்னியாசத்தை சிரவணம் செய்து, ஸபை முடிந்த பின்னர் வெளிவந்து அழகிய ஸ்திரீ ஒருவள் ஒரு கோச் வண்டியைக் கூவி நிறுத்தி அதன்மேற் கொண்டு—"ஹோட்டேல் டிபாரிஸ்" என்று சாரதிக்குக்கூறினாள். உடனே வாயுக்தியாய் நடத்தப்பட்டு, வாடகை வண்டி ஓட ஆரம்பித்தது. சுமார் 1½ நாழிகை பரியந்தம் தன்னை மறந்தவள் போலிருந்த அந்த ஸ்திரீ சன்னல் வழியாய் எட்டிப்பார்த்து, வண்டி ஹோட்டல் மார்க்கத்தை விட்டு நகரை விட்டு வெளியே செல்லும் பெருஞ் சாலைமார்க்கமாய்ப் போவதைக் கண்டச்ச மடைந்து சாரதியைக் கூவினாள். அவனோ முற்றும் வாயிழந்தவன்போல் காணப்பட்டு வண்டியை நடத்திக்கொண்டு போனான். நம்மிளங் கன்னிகை பாதி பிராணனாகி ஒன்றுந் தோன்றாதவளாய் வெருண்டிருக்க, கதவைத்திறந்து சாஸ்திரோக்தமாய் வண்டியை நிறுத்திப்போட்டு சாரத்தியம்

செய்த முரடன் அவளையணுகி ஓடிவரவே, நஞ்சுமுகி குரங்கே பாய்ந்து சிட்டுப்போல் பறந்தனள். மூர்க்கன் அவளைப்பின்தொடர யத்தனித்துக் குதிரை முன் ஓடிய வேகத்தால் அவன் தொப்பி கழன்றுவிழுந்ததைக்கண்டு மிரண்ட குதிரை வண்டியை முறித்துக்கொண்டு அவனைப் பின்பற்றி ஓடி மரந்தடுத்து விழுந்த அப்பாபியை மிதித்துவைத்து அவன் உடலினின்றும் அவன் சிரசைக் கண்டித்துச் சென்றது. "தெய்வம் நின்று கொல்லும்" என்னும் பழமொழி பொய்யாமொழியே.

பட்சியெனப் பறந்த பசுங்கொடி சிறிது தூரத்தில் வெயர்த்துக்களைத்து விழுந்தாள். வண்டியைப் பின்பற்றி யோடிவந்த எமதூதரை யொத்த 4 மனிதர்கள், அவளைக்கிட்டி நெருங்கி—"நீ அணிந்துள்ள நகையை நொடியில் கழற்றிக்கொடு" வென்று அவளை உறுத்தினார்கள்.

அவளோ பூனையைக்கண்ட கிளிபோல் கதறினாள். அந்நால்வரிலொருவன் "இவளை முத்தமிடுவேனென்று" அவளைத்தீண்டினான். குஷ்டநோயால் வருந்திய சண்டாளன் ஸ்பரிசம்பட்டதுபோல் அவள் மேனிகுன்றித் தேகம் நடுங்க உளம் வெருண்டு மனம் பதர அதூர்த்தனை உதறினாள். இன்னும் ஒரு நிமிஷம் இச்சண்டாளர் அவளை வருத்தியிருப்பரேல் அவள் உயிர் நீங்கியேயிருக்கும். தெய்வசங்கல்பமாய்க் கூப்பிடுதூரத்தில் வாகனரூடனாய் வந்த சுந்தரபால்யன் ஒருவன் இக்கொடியர்கள் விளைத்த கொடுமையைக்கண்டு மனம்பொறாது முற்பட்டே குண்டுகள் கெட்டிப்பட்டிருந்த தனது கைத்துப்பாக்கியைப் பெண்டாள ஆசைகொண்ட மூர்க்கர்கள்மீது பிரயோகிக்கவே, அக்குண்டுகள் மார்பைத்துளைத்து அவன் ஆசையை நிராசையாக்கி அவனைக் காலனிடஞ் சேர்ப்பித்தன. குண்டுபட்டு அலறி விழுந்திறந்த அக்கொடியனைச்சூழ்ந்த அவன்நண்பர்கள் திடுக்கிட்டுத்திரும்பிப்பார்க்க எதிரியாய்வந்த புருஷன் ஒருவனே யெனக்கண்டு, கத்தியையுருவிக்கொண்டு அவனை வெட்டிவீழ்த்தக் குபீரென்று அஸ்வாரூடன்மீது பாய்ந்தார்கள். அவனோ நரிக்கூட்டத்தைப் புகுந்து கலக்கிய சிங்கக்குட்டிபோல் வாளையுருவி, குதிரையைப்பம்பரம்போலாட்டி அன்னோர்வீசிய ஆயுதங்களைத்தட்டி, அம்மூவரிலொருவன் தலையை பனங்காய் அறுத்துருண்டதுபோலத் தரைமீதுருளச் செய்தான். மிகுந்தவருளொருவன் எறிந்த ஈட்டியொன்றால் சிறுவன்எறிய வாகனம் காலொன்று வெட்டுண்டு தவறிவீழ்ந்து, பால்யனை பூமிதேவியிடம் சேர்ப்பித்தது. திடீரெனவீழ்ந்த அதிர்ச்சியால் தீரன் கைப்பற்றிய ஆயுதம் கைவிட்டோடவே, கடையர்களிருவரும் அவனுயிரைக் கவர்வான்கொதித்து அவன்மேல் விழுந்தார்கள். விழுந்தநிமிஷமே தற்செயலாய் அவ்விடம் அப்போதுவந்த மகம்மதியன்ஒருவன் இரும்பினும் வலிய தன் வச்சிரகரத்தால் கொலையாளரிருவரையும்இடித்துஅவனுற்றலைப்பொடித்துபிரஜ்ஞையைப்போக்கி இளஞ்னை பிராணபத்தினின்றும் விடுவித்தனன். இதற்குள் நான்குமுழதூரத்தில் மரமாய் நின்றமாது, பனிமலையாக்கரைந்து, தன்னன்றியறித

லைக்காட்டக் குதிரைவீரனை யன்புடன் நெருங்கி அவனைமூர்ச்சை தெளிவிப்பான்கருதி மகம்மதிய பிரபுவுடன் அவனை அதிசிரத்தையுடன் தூக்கி தன் மடிமீது அவன் சிரசைக்கிடத்தி இளநிலாவெளிச்சத்தில் அவன் முகவிலாசத்தை நோக்கியவள், திடுக்கிட்டுத் திகைத்து "பாஸ்கரசாமி, பாஸ்கரசுவாமி" யென்று ஓலமிட்டுக்கதறி, "அன்ப, ஐய, அச்சோ! இதுசதியோ—அப்பா வாய்திறவாயோ—மோசஞ்செய்வாயோ-கண்மணி" என்று கூவிப்பதறினாள். அடுத்துநின்றமகம்மதிய இளம்பிரபு பாஸ்கரநாமத்தைக்கேட்டவுடன் "ஐயோ பாஸ்கரனா—எங்கள் மன்மதனா—அந்தோ—ஆம்—ஆம்—அம்மா, நீர்யார்? குழந்தைஉயிர்நீற்றானே—அவமே-உன்னருளோ" வென்று பன்முறை முறையிட்டு பாஸ்கரசுவாமிக்கு சுவாசம் கடினமாய் வருவதையறிந்து, தன்னிடமிருந்த ஒரு பிராந்திப்புட்டியைத்திறந்து இரண்டொருதுளிகளை அவன் உட்கொள்ளும்படிசெய்து, கொஞ்சம் தூரத்தில் இருந்த குளமொன்றையடைந்து, புட்டியைக்கழுவி அதில் ஜலத்தை நிரப்பிக்கொண்டு காற்றாய்ஓடிவந்து ஜலத்தை ஒருபாதி குடிப்பித்து ஒருபாதி சிறுகச்சிறுக அவன்முகத்தில்விட்டுக் குளிமையுண்டுபண்ணியபோது, இளைஞன் சுழுத்தி நிலைவிட்டு, சாக்கிராவஸ்தையைப் படிப்படியாயடைந்து சரஸ்வதி திருமுகத்தைக்கண்டு, களிப்பெய்தி தாயைப்பிரியமாட்டா திருகத்தழுவியழும் குழவியேபோல் சரஸ்வதி இடையையிருகச்சுற்றிய கரத்தினனும் "அரசி, என்னுயிராவாய்! இதுசுவப்பனமாயின் எனக்குவேறவஸ்தை நேரிடாதொழியச் சிவனைப்பிரார்த்திப்பேன். இது எந்ததேசம்? நாமெவ்வாறிங்கடைந்தோம்?" இவர்யார் இந்தப்புருஷர்? என்று ஆவலுடன் கேட்டான். நம்பன் சாக்கித்ரதை சொப்பனமாகக்கண்டு மயங்கிய மனநிலையையுணர்ந்தநங்கை கண்கள் நீர்சொரிய உடலம் நடுங்கி என்புகளாய உதரம் மின்னலையொத்து உடம்பிற் பாய்ந்து மயிர்க்கூச்செரிய அவனன்பிற்கரைந்து வாய்குழற "ஐய, பாஸ்கர! அச்சமொழிக—நீர் என்னைஇரண்டாமுறையும் ரட்சித்தது சாக்கிராவத்தையில் நிகழ்ந்த நிகழ்ச்சியே—சொப்பனமன்று; ஒன்றுக்கும்பற்றாத அடியாளை நீர் அபரிமிதமாய்ப் பக்திசெய்தது அடியாளை நித்தியாநந்தத்தில் மூழ்த்தியது சத்தியம். ஏழையை இச்சை வழியாற்றத்தடையொன்றிராது. இற்றைநாள்தொட்டு நீர் சுகிக்கக்காண்பதே எனக்குச்சுகமாகும். உம்மைப் பிரிந்த நான் இனிச்சஞ்சாரப்பிணமாய்த்தான் திரிவேன். உம்மையன்றி யானடையத்தக்க வாழ்வெல்லாம் அஜகஜாந்திரம்" என்றுமுத்துமுத்தாய் மொழிந்தாள. அவள்வருஷித்த அமிர்தவருஷப் பொன்மொழிகளால் நம்பன் அமுதமுண்டவன்போல் களைதெளிந்து எழுந்துஉட்கார்ந்து "பிரியை! இகத்திலடையத்தக்க சுகமொன்றுளதேல் அதையீண்டு முற்றுமடைந்தேன். என்சுவர்னக்கிளி! என்னாருயிரை இங்கு ஜகதீசனறிய உனக்குத் தத்தஞ்செய்கிறேன். அதையங்கீகரிக்கவேண்டுகிறேன், கண்மணி!" என்று அளவுகடந்தெழுந்த உள்ளன்பால்மொழிந்து, அவளை பதில் கூறவொண்ணாது தடுப்பான்; மறுபு ம் திரும்பி "ஐயா! நீர்யாரோ பெரியர்?"

என்று எதிர்நின்றமகாபுருஷனைப்பார்த்துக் கேட்க, அவர்பதில் கூறுமுன்னமே-அவரைக்குறிப்பாய்ப் பின்னும்நோக்கி "ஐயோ! மாமா, இந்தக்கோலமேன்? நீர் நிரபராதியென்று நானறிவேனே," என்று உரத்துக்கூவ, மகம்மதியபிரபு திரஸ்காரணமாய், இவர்களிடம் விரையும் பற்று கண்டவர் பித்தனேவென்று சந்தேகிக்க-அறிவிழந்தபேதையைப்போலோடி மறைந்தார். பாஸ்கரனும் சரஸ்வதியும் அத்தியந்த ஆச்சரியமடைந்து சிலநேரம் அங்குமிங்கும் அவரைத்தேடிக் காணாதவராகி பட்டினமுகமாய்த்திரும்பி கால்நடையாச்சென்றவர்-பின்வருமாறு சம்பாஷித்துப்போயினர்.

பாஸ்:—"சரஸ்வதி! நகரையடுத்த 7,8 மயிலில் குடியிருக்கும் என்னண்பரொருவரைப் பார்த்துவிட்டு நல்ல சமயத்தில் நான் அவ்விடம்வராதொழிந்தால் உன்னை, உயிருடன் பின்னுங்காண்பேனோ?"

ச:—"ஆம், பாஸ்கரம். நான்உயிர்நீற்றேயிருப்பேன். தக்கசமயத்தில் மகம்மதியபெரியர் உம்முயிரை ரட்சிக்கத்தோன்றி யிராதபட்சத்து ஐயோ! தெய்வமே"—

பா:—"மைலவ்" உன்னை ரட்சித்து என்னுயிர்மாய்வதும் மகாபாக்கியம்மானே.

ச:—என்னன்பே! உம்முயிரைப்பின்பற்றி என்னுயிர் செல்லாதொழியுமோ, கண்ணாள.!

பா:—மிஸ்டர் ஜான்சன் எனக்கிட்ட ஆணை என்னவாகும், கண்மணி ?

ச:—நம்மைச்சத்தியம் செய்வித்த இவ்வாபத்தே அவ்வாணையைப்போக்கியது அன்ப!

பா:—உன்தாய்தந்தையர் என்னை மருகனாய்க்கொள்ள பிரியப்படுவரோ-மணியே!—

ச:—என்க்ஷேமத்தைக் கோரியேநடக்கும் அப்புனிதர்கள் என்வாழ்விற்கு விக்கினம் ஒருபோதும் நினையார், என்பாஸ்பரக்கண்ணே—

பா:—பிரியசகி! நான்பட்சமிரண்டு இவ்விடம்கழித்து சீமைக்குத்திரும்பி வரும்போது, உன்னை உடனேகண்டுகளிக்க ஜான்சன்கள் விடையளிக்கச் செய்விக்கவேணும், துரைசானி!—

ச:—சித்தம் நாதா-திருவருள் நம்மையப்படியே கூட்டிவைக்கும் பிரபு.

மேற்சொன்னவிதமாய்ச் சரசமாய் சம்பாஷணைசெய்து, பாரிஸ்ஹோட்டலையடைந்து அவரவர்க்கேற்பட்டிருந்த விடுதிகளிற் சென்று களங்கமற்ற சித்தத்தராய் மூத்தவள் சாந்நித்தியத்தி லமூந்திச் சுகித்து, மறுநாட் காலையில் நித்திரை தெளிந்தெழுந்து ஒருவரையொருவர் அடைந்து சிறிது நேரம் சம்பாஷித்து, ஓட்டலைநீத்து அடுத்தரயில்வே ஸ்டேஷனடைந்து, பாஸ்

பரம் விடைபெற்று ஸரஸ்வதி லண்டனையடைய ரயிலேறியும், பாஸ்கரன்ஆப த்திலுதவிய மகம்மதியனைக் கண்டுபிடிக்கவண்டியொன்றின் மேற்கொண்டும் பட்டினத்தின் தட்சண முகமாய்ப் பிரிந்துசென்றார்கள்.

PERIODICAL LITERATURE.

பலபத்திரிகா வித்தாரமஞ்சரி.

வேமன்ன மகாகவி பத்யங்கள்.

விவேக சிந்தாமணி.

(குருவுக்கு மேலானகுரு இன்னவன்)

1. ஆசையறுத் துச்சினமா மங்கிதனை முற்றவித்துப்
பாசிழையார் பற்றறுத்துப் பாங்காகப்—பேசரிய
உண்மைதனை யோர்ந்தோ னொருவன் குருவுக்கு
வண்மைதரு மெய்க்குருவா மற்று.

(பெரியோர்க்குக் கோடார் வேசையர்க்குக் கோடீப்பார்.)

2. ஊசற் கறியு மூதவார் சூரவற்கு
வேசைக்குத் தாங்கள்பெறும் வித்தமெலாம்—ஆசையுடன்
ஈவார்க ளம்மாவவ் வேசைபரி லும்மிழந்தோர்
ஆவாரோ வாசிரிய ராங்கு.

(நீதியில்லா அதிகாரியைப் பேதைகள் வெகுமானிப்பார்.)

3. வானரத்துக் கோர்புதிப வத்திரத்தைக் கட்டிவிடிற்
கானகத்து பந்தியெலாங் கைகூப்பும்—தானதுபோல்
நீதியில்லா மன்னவனை நேசித்துத் தாம்பணிவார்
பேதையர்கள் பேருலகின் கண்.

(சிநேகத் துரோகிகள்போலக் கொடியவரில்லை.)

4 சொற்பிறழு வானுக்குச் சொல்லுமொரு மான்மிலை
அற்பனவன் மற்றோர் நயயறியான்—விற்பழித்த
வாணுதலாய் நட்டதற்பின் வஞ்சிப்பா ரிற்கொடியார்
நீணிலத்தி லில்லை நினை.

(ஈனரைச் சேவித்துப் பயனில்லை.)

5. எத்தனைநாட் சேவித்து மீனமதி யாளர்தமைப்
பெற்றிடுவ தொன்றுமிலை பேசுபயன்—முற்றிழையே!
பாலென்று மீயா மலட்டுப் பசுவையணைந்
தாலென்ன நல்கு மது?

(கடன் படாமல் வாழ்தலே மேலாகும்.)

6. அயலாரை வஞ்சித் தவர்பொருளைக் கொண்டு
மயலார வாழன்மாண் பன்றே—புயலேயும்
கார்குழலா யென்றுங் கடனுண்டு வாழாமை
ஆருலகின் மேலா மறி.

(சிறிய ஏதுக்களால் பெரிய துன்பங்கள் விளையும்)

7. செருப்பினுட் கல்லுஞ் செவியினுள் ளீயும்
உருத்தரும்விழி யிற்றாசு மோதின்—இருத்தடியில்
முள்ளும்வா ழும்பணையின் மோதவரு சச்சரவும்
கொள்ளரிய வாமே குறி.

(ஈசனைமனத்தில் தியானித்தலே எல்லாப் புண்ணியங்களிலும் சிறந்தது.)

8. பன்னதிக டோறும் பரவைமுதற் றீர்த்தத்தும்
துன்னரிய காடுமலை தோறும்போய்க்—கொன்னேதாம்
மெய்வருந்து வாரந்தோ வித்தகனை யுள்ளத்தே
பொய்யகன்று காணறியார் போந்து.

(உடம்பை யலங்கரிப்போர் உண்மையறியார்.)

9. பல்பணிகள் பூண்டுதமைப் பாரோர் வியந்திடுமா
புல்லுமகிழ் வாருள்ளம் பூரிக்கும்—நல்லுணர்வில்
ஏழையவ னந்தோதான் யாரென்று தேர்கிலனே
மாழைநிகர் கண்ணாய் மதி.

(இறந்தவர்களுக்கு வருந்துவர் காரியவசமாகும்.)

10. தந்தைதாய் மாயத் தனயன் வருந்திடலும்
சிந்தைமகிழ் காதலற்குச் சேயிழைதான்—நொந்து
வருந்துதலுங் கார்ய வசமாமே தத்தம்
பொருந்துபயன் போய்விடலாற் போந்து.

(எமனுக்கு ஒளிக்க முடியாது.)

11. மாற்றலர் தஞ சேனையினைக் கண்டு மயங்கிடுமோர்
ஆற்றலிலாப் பேதை யகன்றிடலாம்—தோற்றுமொரு
வெஃமறலி யைக்கண்டு மெய்நடுங்கி யெவ்விடத்துந்
தம்மை யொளிப்பதுதான் சாற்று.

II. ON THE PRESERVATION OF TOPES.

தோப்புப் பாதுகாப்பு.

(விவேகபாநு.)

"மரம் வைத்தார்கள் மோக்ஷமடை-வார்கள்," "எட்டி மரமானாலும் பச்சைமரத்தை வெட்டாதே" என்னும் பழமொழிகளால் மரம் நடுவது முக்கியமென்று நம்மவர்களுக்குத் தெரிந்து அனுசரணையில் இருக்கிறது. பழம் தரும் மரங்கள் அங்கங்கே தோப்புகளாக இருக்கின்றன. நடும் சமயத்தில் சிறுகன்கள் பிழைக்கவேண்டுமென்று குழிகளை வெட்டிக் காயவைப்பதும், குழியில்மூடும் மண்ணுடன் எருவைக்கலப்பதும், அப்போதைக்கப்போது ஜலம் விட்டு வருவதும், சூரிய வெப்பத்தினால் கன்றுகள் துவண்டு போகின்றனவென்று நிழல் செய்வதுமாகிய இக்காரியங்கள் நடந்தேறி வருகின்றன. மண்ணில் செடி பிடிப்புக்கொண்டு தழைத்த பின்பு செடி தானாகவிழும் மழைக்குப் பிழைத்துக் காய்த்துக் கனிகளைத்தரவேண்டுமென்று யாதொரு வேலையும் அநேகர் எடுத்துக்கொள்வதில்லை. இதனால் மரங்கள் சில வருஷங்கள் காய்த்துப் பிறகு தலைமாறிப் போகின்றன. மரம் வெயில் காலத்தில் ஆகாரம் குறைந்தும் மழை பெய்த பின்பு ஆகாரம் அதிகம் கிடைத்தும் நமதுநாட்டுக்கு ஆடு மாடுகள் பிழைக்கிற வண்ணம் உயிர் வாழ்கிறது. வாழ்நாள் காலம் கிரமமாய்த் தீனி தின்று வரும் ஆடு மாடுகள் நோய் நொடிகளுக்கு உள்ளாகாதபடி க்ஷேமமாய் இருப்பது போல் மரங்களும் க்ஷேமமாயிருக்கும்.

தோப்புகளுக்கும் சோலைகளுக்கும் எப்போதும் நீர்கட்டி, எருவிட்டுப் பாதுகாப்பது சாத்தியமாகாத விஷயமாதலால் கூடிய வரையில் அம்மரங்களைக் காப்பாற்றும் வழியை இங்கே சுருக்கமாகக் கவனிப்போம்.

மரங்கள் வேர்நுனியால் ஆகாரம் உட்கொள்வது தெரிந்த விஷயம். இவ்வாகாரம் தகுந்த ஸ்திதியில் இருப்பதற்குக் காற்று அவைகளுடன் கலப்பது இன்றியமையாதது. ஆனதுபற்றிச் சில இடங்களில் வருஷா வருஷம் அடிக்கடி தோப்புகளின் மத்தியில் உழுது வருகிறார்கள். இவ்வுழவினால் மண்ணில் ஆகாயம் கலந்து பிராணவாயு தாதுவர்க்கங்களோடு ஐக்கியப்பட

க்காரணமாகிறது. இதுவுமல்லாமல் உழவினல் மண் ஈரம்காக்கிறதென்பது அநேகருக்குத் தெரியாது. உழுத நிலத்தில் நூற்றுக்கு 7 பாகம் ஈரம் இருக்கிறது. தரிசு நிலத்தில் அதே காலத்தில் நாலே அரைக்கால் பாகம் ஈரம் இருப்பதாகப் பரீக்ஷை செய்தவர்கள் தெரிவிக்கிருர்கள். இவ் வீரத்தை மணல் நிலம் கிரகிக்காமல் விடுகிறது. களிமண் நிலம் நிலைப்பித்து வைப்பதினல் சிலாக்கியமாக எங்கும் மதிக்கப்படுகிறது. பின்னும் மண்ணை உழுது போட்டால் மேல் மண்ணில் ஏராளமாயிருந்து செடிகளின் ஆகாரத்தைப் பக்குவப்படுத்தும்படியான சிற்றுயிர் மடிகின்றதென்று தெரியவருகிறது. இதனல் உழவு டப்பிக்காமல் விடுவது யுத்தமாயில்லை. "கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை" உள்ளவன் எவ்வாறு மீசையை ஒதுக்கிக்கொண்டு சாப்பிடுகிருனே அவ்வாறே எதாவது ஒரு சாதனத்தை அனுசரித்து உழவினல் உண்டாகும் பிரயோஜனத்தைக் கைக்கொள்ளுவதுடன் ஆகாரத்தைப் பக்குவப்படுத்துப்பயான சிற்றுயிர்களையும் காப்பாற்ற வேண்டும். உழவினல் கிளறப்பட்ட லத்தை வெயில் கொடுமைக்கு உள்ளாகாமல் தழையினல் மூடுவது யுக்தம் இது சாத்தியமா என்று அநேகர் நகைப்பார்கள்.

தோப்பில் உதிரும் இலைகளைக் காற்றில் பறக்கவிடாதபடி பாதுகாப்பதுடன் தோட்டத்தில் விளையும் பூண்டுமுதலியவைகள் அங்கேயே மடியும்படி அவைகளை அடுப்புக்குகன் எடுத்துப்போகாமல் தோட்டத்தில் நிலைப்பிக்க வேண்டியது.

இவ்வாறு மாமூலாய் நடத்தி ால் உதிரும் பழுப்பு புல் பூண்டு முதலியன மட்கி மண்ணின் நிறத்தைற்றுவதுடன் ஈரம் காத்துக் கொழுமையையும் உண்டாக்கும். இதனல் ண்ணில் இந்திரியவஸ்து அதிகம் உண்டாகி முன் சொன்ன சிற்றுயிரபலப்பட மார்க்கமாகும். இந்திரியவஸ்து குறைவுபட்டிருப்பதினலேய நம்மூர் மண் கொழுமையில்லாமலிருக்கிறது. ஒவ்வொருநிலத்திலு இந்திரியவஸ்து இல்லையானல் மண் உறுதிப்பட்டு வேர் செல்வதற்குத் தகுந்ததாயில்லாம விருக்கிறது. ஆகையால் இந்திரியவஸ்துவை அதிகப்படுத்தும் மார்க்கங்களைத் தோப்புகளில் நடத்துவது அவசியம். மழைவருமுன் நிலத்தை உழுது கொள், காராமணி, மொச்சை முதலியவைகளில் எது அம்மண்ணில் வளர்ந்து தழையைக்கொடுக்குமோ அதை விதைத்து மழைகாலம் சென்றபின்பு அந்நிலத்தை மறுபடியும் உழுது செத்தைமுதலியன மண்ணில்படிந்தும் மண்ணை மறைத்தும் இருப்பது தோட்டங்களின் க்ஷேமத்தை உண்டாக்கும் பசுந்தாட்பயிரை விளைவிப்பது மழைகாலத்தில் மண்ணில் அதிகமாயிருக்கும் ஈரத்தைக்கிரகிக்கிறது. மழைசென்றபின்பு உழுவது ஈரத்தை ஆவியாய்ப் போகவிடாமல் காக்கிறது. செத்தைமுதலியன மண்ணில் இருப்

பது கடல்பஞ்சு ஈரத்தைக் கிரகித்துவைப்பதுபோல் மண் ஈரம் நிலைப்பிக்கச்செய்கிறது. செத்தை, தழைமுதலியன மண்ணை மறைத்துவைப்பது மண் வெயிலுக்குட்படாது ஆகாரத்தைப்பக்குவப் படுத்தும் சிற்றுயிர்களை வலுக்கச்செய்கின்றன.

ஆகையால் தென்னை, மா, கிச்சிலி முதலிய தோட்டங்களை வெயிலடிபடாமல் மேற்கூறிய உபாயங்களால் தப்பித்துவைப்பது மண்ணில் ஈரத்தை நிலைப்பித்து வெயில்காலம் உதவும்படிசெய்வதுடன் செடிக்குவேண்டிய ஆகாரம் விருத்தியாகும். தோட்டங்களின் மண்ணைக் கிளறுவதற்கு ஐரோப்பிய இரும்புக்கலப்பையும் மண்வெட்டியும் நல்லதல்லவென்று ஐரோப்பியர் தெரிவிக்கிறார்கள். அவர்கள் நாட்டில் ஈரம் அதிகமிருப்பதால் இக்கருவிகளை உபயோகித்தால் ஜல்வி அறிவடையாகும் என்று ஆக்ஷேபிக்கிறார்கள். மழை குறைந்து பெய்து வெயில் அதிகமாய்க்காயும் இந்நாட்டில் கூடியவரையில் வேரை மண்ணுக்குள் செல்லும்படி செய்வதே யுக்தம். ஆகையால் எந்தசாதனங்களினாலும் மண்ணைப் புழுதி செய்வதுடன் இந்திரிய வஸ்துவையும் அதில் ஏராளமாய்ச் சேர்க்க முயலவேண்டும்.

LADIES' PAGES.
மாதர்க்கிதமான பக்கங்கள்.

FEMALE EDUCATION.
பெண் கல்வி.

கல்வி யுடைமை, பொருளுடைமை என்கிற இரண்டினுள் கல்வி யுடைமையே விசேஷித்தது. கல்வி ஆகாரத்தைக்கொடுத்து மறுமைக்கடுத்த காரியங்களை உணர்த்தும். இந்துதேசப் பெண்களுக்குக்கல்வி ஆசாரம் இல்லாமையினால் அஞ்ஞானக்கடலில் மூழ்கியிருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாயிருக்கிறது. பெண்கள் கல்வி கற்பதினால் காதலனுக்கு அடங்கிநடவாமல் அவமதிப்பார்களென்றும், வித்யாகர்வத்தினால் கெட்டுப் போவார்களெனறும் இத்தேசத்தில் பெரும்பான்மையோர் பெண்களுக்குக் கல்வி கற்பிப்பது தகாதென்று துராட்சேபம் செய்கிறார்கள். பெண்களுக்குக் கல்விமுக்கிய மென்பதை சிலர் ஒப்புக் கொண்டாலும் அநேகர் பெண்கள்படித்து அவர்களுத்யோகஞ் செய்து பொருள் சம்பாதிக்கப் போகிறார்களோ, அவர்களுக்குப் படிப்பது வீண்தான் என்று ஆக்ஷேபம்செய்கிறார்கள். தெய்வபக்தி, விவேகம், நற்குணம் இம்மூன்றையு முண்டாக்குவதற்குக் கல்வி கற்பிப்பதேயல்லாமல் கேவலம்பணம் சம்பதிக்கிறதற்காகவோ? அல்லவே. "நல்லோர் பொருட்டுப் பெய்யும் மழை தீயோருக்கும் உபயோகப்

படுகிறதே" தவிர, படிப்பதற்கு உத்தியோகம் காரணமென்று சொல்வது சாப்பிடுகிறதற்கே வாசிக்கிறதே யல்லாமல் வாசிக்கிறதற்குச் சாப்பிடுகிறது அல்லவென்று சொல்லுவதற்குச் சமானமாயிருக்கிறது.

கற்ற பெண்களுக்கும் கல்லாத பெண்களுக்கும் உள்ள பேதம்.

பெண்களுக்குக் கல்வி அவசிய மென்பதையும் கற்றபெண்களுக்கும் கல்லாத மற்றையருக்கும் உள்ளபேதத்தையும் அடியில் சொல்லுகிற திருஷ்டாந்தத்தா லறியலாம். ஆகாரம் சரீரத்திற்கு எவ்வளவு முக்கியமோ அப்படியே புத்திக்குக் கல்விஆகாரம் ஆவசியமாகமாக விருக்கின்றது. கடவுள் நமக்கு நாளுக்கு நாள் வளருகிற சரீரத்தைக் கொடுத்திருந்தாலும், அதற்குத் தகுந்த சௌக்கியங்களை நாம் தேடிக்கொள்ளா விட்டால் சரீரம் வளரமாட்டாது. அதுபோல், கடவுள் நம்மை ஞானாத்மாவாக சிருஷ்டித்திருந்தாலும் கல்வி ஆகாரத்தைக் கொடுத்துப் புத்தியை அபிவிருத்தி செய்யவேண்டியது நம்முடைய கடமையாயிருக்கிறது. நாம் வேலைசெய்தாலும், நித்திரை செய்தாலும், நம்முடைய மனம் இளைப்புமின்றிக் களைப்புமின்றி, ஆகாசமண்டலம் பூமண்டம் முழுவதுஞ் சஞ்சரிக்கும் தன்மையுடையது. இப்படிப்பட்ட அந்த மனசுக்கு கல்வித்துணிவு இல்லாவிட்டால் அச்சில்லாச் சகடம் போலவும், கட்டுக் கடங்காக் காளைபோலவும், அது அங்கு மிங்கும் அலைந்து நம்மைக் கல்லிலும் முள்ளிலும் இழுத்துக் கடைசியில் நரகம் என்கிற பாதாளத்தில் தள்ளிவிடும் என்பதற்குச் சந்தேகமில்லை. இப்பொழுது காதலன் சித்தமும் மனையாள் மனமும் ஒரேதன்மையாய் இருக்கவேண்டுவதால் பெண்களுக்குக் கல்விபோதியாவிட்டால் எப்படிச்சன்மார்க்கத்தில் நிலைகொள்ளும்? காசுக்கு ஒருகுதிரை வாங்கவேண்டும், அது காற்றாய்ப் பறக்கவேண்டும் என்பதுபோல் படியாத பெண்களாயிருக்கவும் வேண்டும், உத்தமிகளாய் நடக்கவும் வேண்டும் என்றால் எப்படிமனோரதம் நிறைவேறும்? கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசையா? மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் எவ்வளவு வித்தியாசமோ, அவ்வளவு வித்தியாசம் கற்றவர்களுக்கும் கல்லாதவர்களுக்கு முண்டு. கொலை, திருட்டு, பொய் இந்தக்குற்றங்களைச் செய்கிறவர்களெல்லோரும் படிக்காத ஆண் பெண்களே தவிர, படித்த ஆண் பெண்கள் அல்லவென்று இப்பொழுது நடந்துகொண்டுவருகிற அநேக திருஷ்டாந்தங்களினாலே படித்ததற்கும் படிக்காததற்கும் உள்ள வித்தியாசங்களை அறிந்து கொள்ளுகிறோம். மேற்குறிக்கப்பட்ட முகாந்தரங்களினால் "கற்றவளே துரைசாணி, கல்லா மற்றவளே சுத்தமடைய துரைசாணி, கல்லாமற்றவளே சுத்தமடைய சாம்பிராணி" என்பதில் உண்மை விளங்குகின்றது.

கல்வி பெண்களைக் கெடுக்காது.

பெண்கள் கற்பதினால் தர்மமுதலிய சுகுணங்கள் அதிகரித்துக் காதலன்மேல் பக்தியும் விசுவாசமும் உண்டாகுமே தவிர அவர்கள் ஒரு நாளும் புருஷத்துரோகி ஆகவேமாட்டார்கள் இப்படிச் சொல்வதற்கு ஐரோப்பிய ஸ்திரீகளே உதாரணம். புருஷர்கள் கல்விகற்று நற்குண முண்டகாமலிருப்பதுபோல ஸ்ரீகளிலும் சிலர் கல்வி கற்று பயன் அற்றவர்களாகவாகலாம். இந்தக் காரணத்தைக்கொண்டு பெண்கள் படிக்கக்கூடாதென்று சொல்வது முற்றும் தப்பு. ஒருவன் தன் பெண்சாதிக்குக் கண்ணிருந்தால் அந்நிய புருஷனைப் பார்ப்பாளென்று குருடியை விவாகஞ்செய்து கொள்ளச சம்மதிப்பானா? அப்படியே வித்தியாப்பியாசத்தினால் அகங்காரம் என்கிற கடலில் மூழ்கிக் கெட்டுப்போனாலும் மற்றுப் பெண் பிரஜைகளைபடிப்பிக்க கூடாதென்று விலக்குவது யுக்தமல்லவே.

குறுணிமையிட்டாலும குருட்டுக்கண் நல்லகண் ஆகாததுபோலச், சிலர் படித்தும் சீர்படாமல் இருப்பது சுபாவதுர்க்குணமே தவிர கல்வியால் வந்த குற்றமென்று சொல்வது அசங்கதமன்றோ?

படித்த பெண்கள்.

முற்காலத்தில் பெண்கள் படித்தார்கள். பெண்கள் கற்பது காதலனுக்குதவியே. பெண்களுக்குக் கல்வி அழகே அழகு. பெண்கள் படிப்பது புராதன வழக்க மல்லவென்று சொல்வது தப்பிதமே தவிர யதார்த்தமல்ல. திருவள்ளுவருடைய சகோதரியாகிய ஔவை, உப்பை, உறுவை. வள்ளியம்மை முதலானவர்கள் கல்விகற்று அநேக பிரபந்தங்களைச் செய்யவில்லையா? திருக்குறள், நாலடியார், காசிகாண்டம் முதலிய நூல்களில் பெண்களுக் கிருக்க வேண்டிய கற்பு லட்சணம் முதலிய குணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளினால் முற்காலத்தில் பெண்கள் படித்தார்களென்றும் தற்காலத்திலும் படிக்கிறதற்காக அந்தந்த நூல்களை யியற்றினார்களென்றும் தெரிய வருகிறது.

பெண்கள் கற்பதினால் ஒரு மந்திரியைப் போலவும், பிள்ளைகளுக்குத் தாய் புத்திமதிகளைச் சொல்லுகிறதுபோல சிலவேளையில் தாயாகவும், காதலனுக்கு உதவியாயிருக்கிறாள்.

பெண்களுக்கு மயிரழகும், மஞ்சளழகும் அழகல்ல. கல்வியே அழகு. ஏனெனில் மேற்சொல்லிய உலகச்சிற்றின்ப அழகுகளினால் மறுமைக்கு என்ன பலன்? ஒன்று மில்லை. மறுமை அழகைத் தேடுதற்கு கல்வி அழகை ஒருவேராகவும் மறுமை அழகை ஒரு மரமாகவும் வைத்துக்கொண்டு, அப்பேர்ப்பட்ட அந்த மரமாகிய மறுமைக்கு வேராகிய கல்வியில்லாவிட்டால் வேர் இல்லா மரம்போல் பயனற்று வீழ்ந்துவிடும். ஆகையால் மறுமைக்கு

நற்காரியங்களை அறிந்துகொள்ளும்பொருட்டு பெண்களைப் படிப்பிப்பதினல் உண்டாகும் அழகுதான் அவர்களுக்கு மேலான அழகு. ச. ஐ. மி.

DEPARTMENTAL NOTES.

பலதுறைக் கலாவிசேடக் குறிப்புகள்.

AGRICULTURAL & INDUSTRIAL.

விவசாயம், கைத்தொழில்.

எலும்புத்தூள் எரு.

---

1. இவ்விந்திய நாட்டு விவசாயிகள் எலும்புத்தூள் நிலங்களுக்கு உரமாய் உபயோகப்படும் என்பதை அறியாதவர்களாயிருக்கிருர்கள். ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் எலும்புத்தூளை வெகு அதிகமாய் நிலங்களுக்கு உரமாய் உபயோகிக்கிருர்கள். அப்படி அவர்கள் இன்றைக்கு நேற்றைக்கு உபயோகிக்கத் தலைப்பட்டிருக்கிருர்களென்று சொல்வதற்கில்லை. அவர்கள் அதனை உரமாய் உபயோகிக்க ஆரம்பித்து இப்பே குறைந்தது 100 வருஷ காலமிருக்கும். எலும்புத்தூள் வெகு சிலாக்கியமான உரமாகிறதென்னும் எண்ணம் வருஷத்துக்கு வருஷம் பலப்பட்டுவருகிறபடியால் மேல்நாட்டு விவசாயிகளுள் பெரும்பாலார் அதனைவாங்கி உபயோகிப்பதையே விரும்புகிருர்கள். ஆனல் அதனை விவசாயிகள் எவ்வளவாகவேண்டியிருக்கிருர்களோ அவ்வளவாக அதுகிடைப்பது அரிதாயிருக்கிறது. எலும்புத்தூளில் நல்லபயிர் உணவாயுள்ள நைட்ரோஜன் என்னும் உப்புவாயுவும் கார்பாரிக் ஆஸிடும் அதிகமிருப்பதாய் சாஸ்திரம்வல்லோர் கருதுகிருர்கள். இந்திய விவசாயிகள் பெரும்பாலும் உரமாய் உபயோகிக்கும் கால் நடைகளின் சாணத்திலும் மூத்திரத்திலும் பயிர்களை வளர்க்கக்கூடிய உணவுகள் என்று மேலேசொல்லப்பட்ட இரண்டு பொருள்களும் இருக்கின்றன வாஞலும், கால்நடைகளின் சாணத்திலும், மூத்திரத்திலும் இருக்கும் உப்புவாயு சம எடை எலும்புத் தூளிலுள்ளதைவிடக் குறையென்றே விவசாயத்தொழில் வல்லோர் கண்டுபிடித்திருக்கிருர்கள். அக்காரணம்பற்றி அமெரிக்காவில் அனேகம் விவசாயிகள் குதிரைலாயத்து எருவையும் கால்நடைக் கொட்டில்களில் சேரும் எருவையும் நிலங்களுக்கு உரமாய் உபயோகிப்பதைவிட்டு எலும்புத்தூள்களை உபயோகிக்கிருர்கள். ஆனல் ஒரு விசேஷம். அவர்கள் தனி எலும்புத்தூளைமட்டும் உபயோகிப்பதில்லை, மரச்சாம்பலையும் கலந்து

போடுவார்கள். அமெரிக்காவில்மட்டும் அன்றி மத்தியதரைக் கடலிலுள்ள ஸிஸிலித்தீவில் விவசாயிகள் இனிய பழவகைகளைக் கொடுக்கும் மரங்களை வளர்க்க எலும்புத்தூள்களையும் மரச்சாம்பலையும்தான் மிகுதியும் எருவாய் உபயோகிக்கிறார்கள். இத்தென்னிந்தியா நாட்டில் எலும்புத்தூள்களை உரமாய் உபயோகிப்போர்கள் இல்லாமற் போகவில்லை. காப்பி தேயிலைமுதலான தோட்டப்பயிர்செய்யும் ஆங்கிலோ இந்தியர்கள் எலும்புத்தூளைத்தான் அதிகமாய் உபயோகிக்கிறார்கள். பூங்காளமாகாணத்தைச்சேர்ந்த பர்ட்வான் பண்ணையில் நெற்பயிர்விளையும் நிலங்களுக்கு எலும்புத்தூள் உரமிடப்பட்டதில் ஏகருக்கு 6 மணங்கு வீதம் எலும்புத்தூள் போடப்பட்ட நிலங்கள் ஏகருக்கு 100 மணங்குகொட்டில் சாணம் போடப்பட்ட நிலங்களைவிட அதிகமாசூலைக் கொடுத்ததாய்த் தெரிகிறது. இந்தியாவிலுள்ள ஏழைவிவசாயிகள் எலும்புத்தூளையே முழுதும் உரமாய் உபயோகிக்கக்கூடிய சக்தியுள்ளவர்கள் அல்லராதலால், எலும்புகளை இடித்துப் பொடிசெய்து அவைகளைக் கொட்டில் சாணத்தோடு கலந்துபோட்டால் நிலங்கள் நல்ல மாசூலைக்கொடுக்கும். எலும்புகளைத் துண்டுகளாய் இடித்து அவற்றைக்கொட்டில் சாணத்தில் ஊறவைத்திருந்து அவைகள் இரண்டையும் சேர்த்து உரமிடுவது இந்நாட்டு விவசாயிகளுக்கு சாத்தியமாகாமற்போகாது. உலக்கைகொண்டாவது, செம்மட்டிகொண்டாவது எலும்புகளை இடித்துப் பொடிபண்ணக்கூடும். அப்படிப் பொடிசெய்யப்பட்டவைகளைச் சாணத்தோடுகலந்து உபயோகிக்கவும் கூடும். விவசாயிகளுக்கு அது கஷ்டமாகமாட்டாது. அப்படிச் செய்யாவிட்டால் எலும்புப்பொடிகளை சாம்பலோடுகலந்து குழியைவெட்டிப் புதைத்துவைக்கலாம். அக்குழியில் கால்நடைகளின் மூத்திரம் போய் விழுந்துகொண்டிருக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்துவைக்கலாம். இவ்விருவிதமாயும் எலும்புப்பொடிகளை உரமாய் உபயோகித்தல் நெல் விளையும் நிலங்கள் நல்ல மாசூலைக்கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

வாழை நார்.

2. சிறிதுகாலமாக வாழையிலிருந்து உபயோகமற்றவை யென்று நிராகரிக்கப்பட்டுவந்த வாழைநாரும் உபயோகமுள்ள பொருள் என்று பெரிதும் போற்றப்பட்டுவருகின்றது. அந்நாரை எடுத்து வியாபாரச்சரக்குக்காக வேற்று நாட்டுக்கனுப்பலாம். அந்நார் எடுக்கத்தக்க யந்திரமொன்றும், பலர்களால் செய்யப்பட்டு வருகின்றது. அந்நாரினை பக்குவப்படுத்தி வேற்றுநாட்டிற்கனுப்பி இலாபஞ் சம்பாதிப்பதில் நம்மவரில் ஏழைக்குடியானவர்கள் தமது முழுக்கவனத்தைச் செலுத்தல் அவசியமானதே. அத்தகையவியாபாரம் மிகச் சுலபமானதே. விவசாய நாடாகிய நம்மிந்தியாவில் அத்தொழில் கையாளப்படவேண்டும். அத்தகைய கைத்தொழிலை நம்மவரில் ஏழைக்குடியானவர்கள் மிகுதியும் கவனித்துத் தக்கதுசெய்யவேண்டும். அதனை வியாபாரப்பொருளாக்கி பணம்சம்பாதிப்பதிலும் தம்கவனத்தைச்செலுத்த முற்படவேண்டும். இந்நார் எடுப்பது ஒரு கடினமான காரியமல்ல. இப்படிக் கைத்தொழில் சிறிது சிறிதாக நம் நாட்டில் பரவினாலல்லது நன்மை பயவாது.

The "Chow-Chow."

A VARIETY WEEKLY

(SPECIALLY INTENDED FOR YOUNG MEN).

Annual Subscription (including postage) Rs. 2-8-0

Single Copy 6 pies.

APPLY TO

The Manager, 43, Vepery High Road, Madras.

Ready for Sale.

A PRIMER OF

TAMIL LITERATURE.

The first attempt of its kind. It is a critical and historical Survey of Tamil literature up to date.

Price Re. One. Postage Extra.

Apply to the Secretary—"Madras Literary Bureau," Madras.

New Books.

புத்தம் புதிய புத்தகங்கள்.

இரசாயன சாஸ்திரம்.

(முதற்புத்தகம்)

விலை அணா ஆறு.

இது புத்தகத்திலே இரசாயன சாஸ்திர நுட்பங்களைப் பற்பல அழகிய படங்களோடு நன்கு விளக்கிக்காட்டி இருக்கின்றது. நல்ல பளபளப்பான உயர்ந்த கடிதத்திலே நலமாக அச்சேறியுள்ள புத்தகம். இது சிறுவர், சிறுமியர், ஆகிய சகலருக்கும் பயன்படக்கூடியது.

சத்திய விஜயம்.

இது அரிச்சந்திரன் திவ்விய சரித்திரம். நற்றமிழ் இனிய நடையில் எழுதப்பட்டுள்ளது. சத்தியமே மாந்தர்க்கு உயர்ந்த விரதமென்பதை விளக்கிக்காட்டு மொப்பற்ற திருமுறை இதுதான்.

விலை அணா 4.

வேண்டுவார் உடனுக்குடனே எழுதவும். வி. பி. யில் அனுப்பப்படும். தபாற்கூலிவேறு.

செக்ரடரி

மதராஸ் லிடரரிபூரோ,

10, பிராட்வே மதராஸ்.